بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

இதழ் 10

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

19 ஜமாதுஸ்ஸானி 1439 ஹிஜ்ரி கமரி 8 அமான் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

8 மார்ச் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ ؕ وَمَا تُقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ مِّنْ خَيْرٍ تَجِدُوْهُ عِنْدَ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ ○

தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான்.

(அதிகாரம் அல் பக்கரா : 111)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நான் எனது ஒளியைக் காட்டுவேன். எனது வல்லமையினால் உம்மை உயர்த்துவேன். உலகிற்கு எச்சரிக்கை செய்பவர் ஒருவர் வந்தார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மேலும், மிகவும் வலுவான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.**

**இறைவன் முழுக்க முழுக்க தனது வல்லமையைக் காட்டுவதன் மூலமாக இந்த ஜமாஅத்தை நிறுவியுள்ளான். அது அல்லாமல் இந்த அளவு சமுதாயத்தின் எதிர்ப்பு இருக்கும் நிலையில் இது நடப்பது சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்தது.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**111 -வது அடையாளம்:** பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த ஒரு முன்னறிவிப்பு இருக்கின்றது. நான் எனது ஒளியைக் காட்டுவேன். எனது வல்லமையினால் உம்மை உயர்த்துவேன். உலகிற்கு எச்சரிக்கை செய்பவர் ஒருவர் வந்தார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மேலும், மிகவும் வலுவான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான். இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டு 25 வருடங்கள் கடந்து விட்டன. இது, நான் ஒன்றுமற்றவனாக இருந்த அந்தக் காலத்தில் செய்யப்பட்ட முன்னறிவிப்பாகும். இந்த முன்னறிவிப்பின் சுருக்கம் இதுவாகும்: அதாவது, கடுமையான உட்புற மற்றும் வெளிப்புற எதிர்ப்பின் காரணமாக இந்த இயக்கம் நிலைத்திருப்பதற்கான வெளிப்படையான எந்த நம்பிக்கையும் இருக்காது. ஆனால், இறைவன் தனது ஒளிமயமான அடையாளங்கள் மூலமாக உலகத்தை இதன் பக்கம் ஈர்த்துக் கொண்டு வருவான். என்னை மெய்ப்பிப்பதற்காக வலுவான தாக்குதல்களைக் காட்டுவான். இந்த தாக்குதல்களுள் ஒன்று பிளேக் ஆகும். இதை பற்றி ஒரு நீண்ட காலம் முன்னரே செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த தாக்குதல்களில் உலகில் வந்து கொண்டிருக்கின்ற பூகம்பங்களும் அடங்கும். வேறு என்ன தாக்குதல்கள் இருக்கும் என்பது தெரியவில்லை. இந்த முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்றே இறைவன் முழுக்க முழுக்க தனது வல்லமையைக் காட்டுவதன் மூலமாக இந்த ஜமாஅத்தை நிறுவியுள்ளான் என்பதில் என்ன சந்தேகம் இருக்கின்றது? அது அல்லாமல் இந்த அளவு சமுதாயத்தின் எதிர்ப்பு இருக்கும் நிலையில் இந்த அளவு விரைவாக பல இலட்சம் மனிதர்கள் என்னுடன் இணைந்து விடுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்தது. எதிரிகள் பல முயற்சிகளையும் செய்தனர். ஆனால், இறைவனின் எண்ணத்திற்கு எதிரில் எதுவுமே நடக்க முடியவில்லை.

**112 -வது அடையாளம்:** எங்களது மூதாதையர்களால் பணி அமர்த்தப்பட்ட சிலர் மீது தொடரப்பட்ட எங்களது ஒரு வழக்கு குர்தாஸ்பூர் மாவட்டத்திலுள்ள பட்டாலாவிலுள்ள நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்த வழக்கில் எங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று எனக்கு கனவில் காட்டப்பட்டது. நான் பல மக்களுக்கும் முன்னால் இந்த கனவைப் பற்றி கூறி இருந்தேன். அவர்களில் ஓர் இந்துவும் இருந்தார். அவர் என்னிடம் வந்து போய் இருந்தார். அவரது பெயர் ஷரம்பத் ஆகும். அவர் இப்போது உயிருடன் இருக்கின்றார். அவரிடமும் கூட நான் இந்த வழக்கில் எங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்ற இந்த முன்னறிவிப்பை எடுத்துக் கூறியிருந்தேன். இதற்கு பிறகு தற்செயலாக நடந்தது என்னவென்றால், எந்த நாளில் இந்த வழக்கு தொடர்பான இறுதித் தீர்ப்பு கூறப்படவிருந்ததோ அன்று எங்கள் தரப்பிலிருந்து எந்த ஒரு நபரும் ஆஜராகவில்லை. எதிர் தரப்பிலிருந்து ஒருவேளை 15 அல்லது 16 பேர் ஆஜராகியிருந்தனர். அஸ்ர் நேரத்தில் இவர்கள் அனைவரும் திரும்பி வந்து கடை வீதியில் நின்றவாறு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்று கூறினர். அப்போது அதே நபர் (ஷரம்பத்) பள்ளிவாயிலில் என்னிடம் ஓடி வந்தார். என்னை குத்திக்காட்டி கூறும் வகையில் தோழரே! உங்களது வழக்கு தள்ளுபடியாகி விட்டது என்று கூறினார். யார் இதை கூறினார்கள்? என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், எவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டதோ அவர்கள் அனைவரும் வந்து விட்டனர். கடை வீதியில் இவ்வாறு அவர்கள் கூறிக் கொண்டிருந்தனர் என்று அவர் பதில் கூறினார். இதை கேட்டதும் நான் வியப்பில் ஆழ்ந்து விட்டேன். ஏனென்றால், செய்தியை தெரிவித்தவர்கள் 15 நபர்கள் ஆவர். அவர்களில் சிலர் முஸ்லிம்களாகவும் சிலர் இந்துக்களாகவும் இருந்தனர். அப்போது எனக்கு ஏற்பட்ட கவலையையும் துக்கத்தையும் என்னால் எடுத்துக் கூற முடியாது. அந்த இந்து இந்த விஷயத்தைக் கூறி விட்டு மிகவும் மகிழ்ச்சியுடன் கடை வீதியின் பக்கம் சென்று விட்டார். ஒரு வகையில் இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்து விட்டது. ஆனால், எனது நிலைமை எப்படி இருந்தது என்பதை எடுத்துக் கூறுவது எனது சக்திக்கு அப்பாற்பட்டதாகும். அது அஸ்ர் நேரமாக இருந்தது. பள்ளிவாயிலின் ஒரு மூலையில் நான் அமர்ந்தேன். இப்போது இந்த இந்து எந்த அளவு வாதம் செய்தவாறு வழக்கில் வெற்றி கிடைக்கும் என்று முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. அது இப்போது பொய்யாகி விட்டது என்று எப்போதும் கூறி வருவார் என்று எனது உள்ளம் மிகவும் கவலையில் ஆழ்ந்திருந்தது. அப்போது மறைவிலிருந்து ஒரு குரல் எதிரொலித்தது. அது எந்த அளவு உரத்த குரலாக இருந்தது என்றால் வெளியிலிருந்து ஒரு மனிதர் குரல் கொடுத்து அழைக்கின்றார் என்று நான் கருதினேன். அந்த குரலின் வார்த்தைகள், வெற்றி கிடைத்து விட்டது. முஸ்லிமாக இருக்கின்றீரா?; நீர் ஏற்றுக் கொள்ளவில்லையா? என்பதாக இருந்தது. அப்போது நான்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

சூரா அல் மூமினின் ஆரம்ப வசனங்கள் மற்றும் ஆயத்துல் குர்ஸியை காலையிலும் மாலையிலும் ஓதுபவர் அல்லாஹ்வின் பாதுகாப்பின் கீழ் இருப்பார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள நற்செய்தியை ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் இவ்வசனங்களில் நிறைந்துள்ள ஞானங்கள் பற்றிய விளக்கத்தை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் அவற்றின் ஒளியில் ஜமாஅத் சகோதரர்களுக்கு சில முக்கிய அறிவுரைகளைக் கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு போதனை செய்ததற்கு ஏற்ப இந்த வசனங்களை ஓதுவது மட்டும் போதாது. மாறாக, இந்த வசனங்களின் கருத்துக்களை சிந்தித்தவாறு அந்த விஷயங்களை பேணி நடப்பதும் அவசியமானதாகும். நமது செயலளவிலான நிலைமையையும் நாம் சிறந்ததாக ஆக்க வேண்டும்.

இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லாஹ்வின் பண்புகள் தொடர்பான கருத்துக்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

தவ்பா, இஸ்திக்ஃபார் மற்றும் பரிந்துரை தொடர்பான கருத்தின் உண்மை நிலை தொடர்பாக அகத்திற்கு எழுச்சியூட்டும் கருத்துக்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

இந்த வசனத்திலுள்ள அறிவை நாம் பெற வேண்டும். அதை பற்றி திருக்குர்ஆனும் பல இடங்களில் விளக்கிக் கூறி இருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்களும் இது பற்றி கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களும் இந்த வசனங்களிலுள்ள கருத்தை நமக்கு விளக்கிக் கூறியுள்ளார்கள். இந்த விஷயங்கள் நம்மிடம் இருந்தால் பிறகு மனிதன் அல்லாஹ்வின் அருளால் அவனது பாதுகாப்பில் இருப்பான். அல்லாஹ் நமக்கு இதற்கேற்ப நமது வாழ்க்கையை கழிப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

பாகிஸ்தானிலுள்ள நவாப்ஷாவைச் சார்ந்த பேராசிரியர் மதிப்பிற்குரிய அப்துல் காதிர் டாஹிரி அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய ஆபிதா பேகம் சாஹிபா அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமாவின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**2 பிப்ரவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **2 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

حٰمٓ ○ تَنْزِيْلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيْزِ الْعَلِيْمِ ○ غَافِرِ الذَّنْۢبِ وَقَابِلِ التَّوْبِ شَدِيْدِ الْعِقَابِ ذِى الطَّوْلِ ۚ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اِلَيْهِ الْمَصِيْرُ ○
اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ۚ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ ۚ مَنْ ذَا الَّذِىْ يَشْفَعُ عِنْدَهٗٓ اِلَّا بِاِذْنِهٖ ۚ يَعْلَمُ مَا بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا يُحِيْطُوْنَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهٖٓ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ وَلَا يَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِىُّ الْعَظِيْمُ ○

இந்த வசனங்களின் பொருள்: அளவற்ற அருளாளனும் கேட்காமல் வழங்கக் கூடியவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்...

இறைவன் ஹமீது – மிகுந்த புகழுக்குரியவனாகவும் மஜீது – மிகுந்த மேன்மைக்குரியவனும் ஆவான்.

இவ்வேதம் முழுமையான வல்லோனும் முழுமையான ஞானமிக்கோனுமாகிய அல்லாஹ்–விடமிருந்து இறங்கியுள்ளதாகும்.

அவன் பாவத்தை மன்னிப்பவனும், தவ்பாவை ஏற்றுக் கொள்பவனும், தண்டனை வழங்குவதில் கடினமானவனும், அதிகமாக வழங்குபவனும் பேருதவி செய்பவனுமாவான். அவனை தவிர வணக்கத்திற்குரியவன் வேறெவனும் இல்லை. அவனிடமே திரும்பிச் செல்ல வேண்டிய –திருக்கிறது. (40:1–4)

இரண்டாவதாக நான் ஓதிய வசனம் ஆயத்துல் குர்ஸியாகும். இதன் மொழியாக்கம் இவ்வாறாகும்:

அல்லாஹ் – அவனைத் தவிர வணக்கத்திற்–குரியவர் (வேறு) எவரும் இலர். (அவன்) என்றென்றும் உயிருடனிருப்பவன் (தானாகவே) நிலைத்திருப்பவன். சிற்றுறக்கமும், உறக்கமும் அவனை பற்றுவதில்லை. வானங்களிலும், பூமியிலுமுள்ளவை (அனைத்தும்) அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்துரை செய்பவர் எவர்? அவர்களுக்கு முன்னுள்ளவை அவர்களுக்கு பின்னுள்ளவை ஆகியவற்றை அவன் அறிகின்றான். எந்த அளவு அவன் விரும்புகின்றானோ அதை தவிர அவனுடைய ஞானத்திலிருந்து எதனையும் அவர்களால் பெற முடியாது. அவனுடைய அரசாட்சி வானங்களிலும் பூமியிலும் பரவியிருக்கின்றது. அவற்றை பாதுகாப்பது அவனை சோர்வுக்–குள்ளாக்குவதில்லை. அவன் உயர் தகுதி–யுடையவனும் மகத்துவமிக்கவனும் ஆவான். (2:256)

இவை சூரா அல்முஃமின் வசனங்கள் ஆகும். பிஸ்மில்லாஹ்வுடன் சேர்த்து நான்கு வசனங்களாகும். அடுத்து ஓதப்பட்ட வசனம் ஆயத்துல் குர்ஸி ஆகும். இது சூரா அல் பக்கராவின் வசனமாகும். இந்த வசனங்களில் அல்லாஹ்வின் சில பண்புகள் பற்றி கூறப்பட்டிருக்கின்றது. அவனது உயர் தகுதி மற்றும் மகத்துவம் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்–கின்றது. இந்த வசனங்களில் முக்கியத்துவம் தொடர்பாக நபிமொழிகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளை நமக்கு கிடைத்திருக்கின்றது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் காலையில் சூரா அல் முஃமின் அதிகாரத்தின் ஹாம் மீம் முதல் இலைஹில் மஸீர் வரை ஓதினாரோ, ஆயத்துல் குர்ஸியையும் ஓதினாரோ இந்த இரண்டின் மூலமாகவும் மாலை வரை அவர் பாதுகாக்கப்–படுவார். எவர் இந்த இரண்டையும் மாலையில் ஓதினாரோ இந்த இரண்டின் மூலமாகவும் காலை வரை அவர் பாதுகாக்கப்படுவார். (சுனன் திர்மிதி. அப்வாபு ஃபழாயிலில் குர்ஆன் பாபு மஜாஅ ஃபீ சூரத்தில் பகரா. ஆயத்துல் குர்ஸி. ஹதீஸ் 2879)

ஹாம் மீம் சூரா அல் முஃமினூனின் இரண்டாவது வசனமாகும். முதல் வசனம் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் ஆகும். ரஹ்மான் மற்றும் ரஹீம் பற்றி மொழியாக்கத்தின் மூலம் தெளிவாக விளக்கம் கொடுக்கப்பட்டு விட்டது. பிறகு ஹாம் மீம் ஹுரூஃபே முகத்தஆத் அதாவது, சுருக்கெழுத்துக்களாகும். இங்கு கூறப்பட்டிருக்கும் ஹாம் மீம் என்பது ஹமீது மற்றும் மஜீது என்ற சொற்களாகும் ஹமீது என்பதன் பொருள், புகழ்வதற்கு தகுதியுடையவன் என்பதாகும். மேலும், உண்மையான புகழ் அவனுக்கே பொருந்தக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இறைவன்தான் புகழுக்குரியவன் ஆவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 'ஹம்து' என்ற சொல்லுக்கு விளக்கம் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். புகழுக்குத் தகுதியுடைய ஒருவர் ஒரு நல்ல செயலைச் செய்யும்போது அதை புகழ்ந்து கூறுவதற்கே 'ஹம்து' என்று கூறப்படும். மேலும் அது அருட்கொடையை வழங்குபவனைப் புகழ்வதன்

பெயராகும். அவன் தனது நாட்டத்தினால் அருள் புரிந்துள்ளான். மேலும், தனது விருப்பத்திற்கு ஏற்ப பேரருள் புரிந்துள்ளான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எல்லா ஒளிகளுக்கும் அருள்களுக்கும் தலையூற்றாக இருக்கின்ற அந்த இறைவனுக்கே முடிந்த வரை உண்மையான புகழ் உரியதாகும். மேலும் முழுமையான அகப்பார்வையுடன் அவன் எவர் மீதாவது பேரருள் புரிந்திருக்க வேண்டும். அது அல்லாமல் உணர்வே இல்லாத நிலையிலும் அல்லது நிர்பந்தத்தினாலும் அவன் அதை செய்து இருக்கக் கூடாது. எவன் எந்த நிர்பந்தமும் இல்லாமல் அருள் பாலிக்கின்றானோ அவனே உண்மையான முறையில் புகழ்வதற்குத் தகுதி உடையவனாக இருக்கின்றான். உண்மையான புகழ் அவனுக்கே உரியதாகும். எந்த ஒரு காரணத்திற்காகவும் அவன் அருள் புரிவதில்லை. மாறாக, எண்ணற்ற அருள்களை அவன் வழங்கிக் கொண்டே செல்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஹம்து என்பதன் இந்த பொருளை எல்லாவற்றையும் நன்கு அறிந்த, நன்கு பார்க்கின்ற இறைவனிடம் மட்டுமே காண முடிகின்றது. அவனே பேரருள் புரிபவனாவான். முதலிலும் இறுதியிலும் எல்லா அருள்களும் அவனிடமிருந்தே கிடைக்கின்றது. இந்த உலகிலும் மறுவுலகிலும் எல்லாப் புகழும் அவனுக்கே உரியதாகும். மற்றவர்கள் தொடர்பாக செய்யப்படும் புகழ் அனைத்தும் அவன் பக்கமே திரும்புகின்றது.''

(இ.ஃஜாஸுல் மஸீஹ் (மொழியாக்கம்) பக்கம் 97 நஷாரத் இஷாஅத் மூலமாக ரப்வாவில் வெளியிடப்பட்டது)

அதாவது, மற்றவர்களை நாம் புகழ்ந்தாலும் யார் அவரை புகழுக்குத் தகுதியுடையவராக ஆக்கியுள்ளானோ அல்லது பிறர் புகழும் வகையில் அவர் அத்தகைய ஒரு பணியை செய்திருந்தாலும் கூட அதுவும் கூட அல்லாஹ்வின் அருளேயாகும். அல்லாஹ்வே அவர்களை புகழ்ந்து கூறத்தக்க அத்தகைய பணியைச் செய்வதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்கினான்.

''ஹம்து என்ற சொல்லிற்கு மேலும் விளக்கமளித்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: 'ஹம்து' என்ற சொல் எல்லா ஆற்றலும் படைத்த நல்லியல்புள்ள ஒருவரது நல்ல பணியைப் புகழ்வதற்காகவும் அவரை கண்ணியப்படுத்தி அவருக்கு மதிப்பளிக்கும் வகையில் நாவால் புகழ்ந்து கூறுவதற்கும் கூறப்படுகின்றது. முற்றிலும் முழுமையான புகழ் கம்பீரமிக்க இறைவனுக்கு மட்டுமே உரியதாகும். எல்லா வகையான புகழும் அது குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் அது திரும்புகின்ற இடம் வழிதவறிச் சென்றவர்களுக்கு நேர்வழியை வழங்குகின்ற –வனும், இழிவான மக்களுக்கு கண்ணியத்தை வழங்குகின்றவனுமாகிய நமது இறைவன் ஆவான். சுயமே புகழுக்குரியவை அனைத்துமே அவனைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றன.'' (கராமாத்துஸ் ஸாதிகீன் (மொழியாக்கம்) பக்கம் 133 நஸாரத் இஷாஅத் மூலமாக ரப்வாவில் வெளியிடப்பட்டது)

மேலும் 'ஹம்து' என்ற சொல்லிற்கு விளக்கமளித்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த 'ஹம்து' என்ற சொல் இன்னொன்றையும் இவ்வாறு சுட்டிக் காட்டுகின்றது. அல்லாஹ் தபாரக் வதஆலா கூறுகின்றான். எனது அடியார்களே! எனது பண்புகள் மூலமாக என்னை அடையாளங்கண்டு கொள்ளுங்கள். எனது சிறப்புகள் மூலம் என்னை அடையாளங்கண்டு கொள்ளுங்கள். நான் குறையுள்ளவர்கள் போன்றவன் அல்லன். மாறாக, எனது புகழின் அந்தஸ்தானது புகழின் உச்சத்திற்கே சென்று புகழப்படுபவர்களது அந்தஸ்தை விடவும் மிக மேலானதாகும். வானங்களிலும் பூமியிலும் என்னிடம் உங்களுக்கு கிடைக்காத புகழ்வதற்கு தகுதியுள்ள பண்புகள் வேறு எவரிடமும் உங்களுக்கு கிடைக்காது. நீங்கள் புகழ்வதற்கு தகுதியுள்ள எனது பண்புகளை எண்ண விரும்பினால் நீங்கள் அவற்றை ஒருபோதும் எண்ண முடியாது. அதற்காக எவ்வளவுதான் உயிரை மாய்த்தவாறு நீங்கள் சிந்தித்தாலும் சரியே; தனது பணிகளில் மூழ்கியிருப்பவர்களைப் போன்று இந்த பண்புகள் தொடர்பாக நீங்கள் எவ்வளவுதான் சிரமத்தை மேற்கொண்டு சிந்தித்தாலும் சரியே. நன்றாக சிந்தனை செய்யுங்கள். என்னிடம் இல்லாத ஏதாவதொரு புகழ் உங்களுக்கு வேறு எங்கும் தென்படுகின்றதா? என்னிடமிருந்தும் என் முன்னிலையிலிருந்தும் தொலைவில் இருக்கின்ற அத்தகைய ஏதாவதொரு சிறப்பு பற்றிய தகவல் உங்களுக்கு கிடைத்திருக்கின்றதா? அவ்வாறு நீங்கள் எண்ணுவதாக இருந்தால் நீங்கள் என்னை அடையாளங்கண்டு கொள்ளவேயில்லை. மேலும், நீங்கள் குருடர்களாகவே இருக்கின்றீர்கள்.

எனவே, ஒவ்வொரு புகழும் அல்லாஹ்விற்கே பொருந்தக் கூடியதாக இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், நிச்சயமாக நான் (அதாவது அல்லாஹ்) எனது பண்புகள் மற்றும் சிறப்புகள் மூலமாகவே அடையாளங்கண்டு கொள்ளப்படு –கின்றேன். நான் பொழிகின்ற பெருமழை பற்றி எனது அருள்களின் மழை பொழிகின்ற மேகங்கள் மூலமாகத்தான் நற்பண்புகளுக்குரியவனாகவும் எல்லா சிறப்புகளின் தொகுப்பாகவும் நான் இருக்கின்றேன் என்று எவர் உறுதியாக நம்புகின்றனரோ அவர்கள் எங்கு எந்த சிறப்பைக் கண்டாலும் தமது சிந்தனைகளை அதன் இறுதி எல்லை வரை உயரே பறக்க விட்டாலும் அதன் மூலமாக அவர்களுக்கு எந்த கம்பீரம் தென்பட்டாலும் அதனை அவர்கள் என்னுடன் தொடர்புபடுத்தியே கூறினர். அவர்களது அறிவிலும் பார்வையிலும் பெரிதாக இருக்கின்ற ஒவ்வொரு மகத்துவத்தையும் அவர்களது சிந்தனைகளின் கண்ணாடியின் தெரிகின்ற ஒவ்வொரு வல்லமையையும் அவர்கள் என்னுடன் தொடர்புபடுத்தியே கூறினர். இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் என்னை அறிந்து கொள்கின்ற வழிகளில் இவர்கள் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றனர். உண்மை அவர்களுடன் இருக்கின்றது. அவர்கள் வெற்றி பெறுபவர்களாவர். எனவே, அல்லாஹ் உங்களை பாதுகாப்புடன் வைப்பானாக. எழுங்கள் கம்பீரமிக்க இறைவனின் பண்புகளைத் தேடுவதில் ஈடுபடுங்கள். அறிவுள்ளவர்கள் மற்றும் சிந்தனை செய்பவர்களைப் போன்று இவற்றை சிந்தனை செய்வதுடன் ஆழமான பார்வையுடன் இவற்றைப் பாருங்கள். ஏனென்றால், 'ஹம்து' அதாவது இறைவனை புகழ்வதற்குரிய பண்புகள் பற்றிய அறிவு நமக்கு இருந்தால்தான் மற்ற பண்புகள் பற்றிய அறிவும் நமக்கு இருக்க முடியும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நன்றாக கவனித்துப் பாருங்கள். சிறப்பின் ஒவ்வோர் அம்சத்தின் மீதும் ஆழமான பார்வையைச் செலுத்துங்கள். இந்த உலகின் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் ஒரு பேராசையுள்ள மனிதன் மிகவும் விருப்பத்துடன் தனது விருப்பங்களைத் தேடுவது போன்று நீங்கள் அவனைத் தேடுங்கள்.

அல்லாஹ்வின் அருள்களை அறிந்து கொள்வதற்கு அவனது பண்புகளை பற்றி அறிந்து கொள்வதற்கு அவனை புகழ்வதற்கான வழிகளை தேடுவதற்கு மிகவும் முயற்சி செய்ய வேண்டும். பேராசையுள்ள ஒரு மனிதனைப் போன்று முயற்சி செய்ய வேண்டும்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: ''நீங்கள் அந்த இறைவனது முழுமையான சிறப்புகளை அறிந்து அதன் நறுமணத்தை நுகர்ந்து விட்டால் ஒருவகையில் நீங்கள் அவனையே பெற்று விட்டீர்கள். இது எத்தகைய இரகசியம் என்றால் நேர்வழியை வேண்டுபவர்களுக்கே இது திறந்து தரப்படுகின்றது. ஆக, இவனே உங்களது இறைவனும் உங்களது எஜமானனும் ஆவான். சுயமே முழுமை பெற்றவன் ஆவான். மேலும் எல்லா முழுமையான நற்பண்புகள் மற்றும் எல்லா புகழ்களின் தொகுப்பாக அவன் இருக்கின்றான்''.

(கராமாத்துஸ் ஸாதிகீன் (மொழியாக்கம்) பக்கம் 135-137 நஸாரத் இஷாஅத் மூலமாக ரப்வாவில் வெளியிடப்பட்டது)

எல்லா புகழ்களும் அல்லது புகழ்வதற்குத் தகுதியுள்ள அனைத்தும் அவனிடம் ஒன்று சேர்ந்து இருக்கின்றன. இதுவே அல்லாஹ் புகழுக்குரியவ –னாக இருக்கின்றான் என்பதைப் பற்றிய இந்த அறிவுதான் நமக்கு கிடைக்க வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் ஏனைய பண்புகளையும் நாம் அடையாளங்கண்டு கொள்ள முடியும்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: அவன் 'மஜீத்' ஆக இருக்கின்றான். மிகுந்த மேன்மைக் –குரியவனாக இருக்கின்றான். மிகுந்த கண்ணியத்திற்குரியவன். அல்லாஹ்வின் கண்ணியம் என்பது நாம் மனிதர்கள் தொடர்பாக அவர்கள் பெரியவர்களாக இருக்கின்றனர் என்று கூறுவது போன்றோ அல்லது வயதில் பெரியவர்களாக இருப்பவர்களை பார்த்து மக்கள் அவர்கள் பெரியவகளாகி விட்டனர் என்று கூறுவது போன்றோ கூறுவது கிடையாது. மாறாக, அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தி இதை கூறும் போது அதன் பொருள், அவன் மிகவும் புகழ்வதற்கு தகுதியுடையவனும் மேலான மகத்துவத்தை உடையவனாகவுமாக இருக்கின்றான் என்பதாகும். அதுவரை எவராலும் சென்றடைய முடியாது. அவன் எப்படிப்பட்டவன் என்றால் அவனது அருளுக்கு எந்தவோர் எல்லையும் இல்லை. அவன் வழங்குகின்றான்; வழங்கிக் கொண்டே செல்கின்றான். ஒருபோதும் அவன்

சோர்வடைந்து விடுவதில்லை. எனவே, வசனத்தைப் படிக்கும்போது அல்லாஹ் 'மஜீத்' அதாவது மிகுந்த மேன்மைக்குரியவனாக இருக்கின்றான் என்பதன் இந்த பொருள் நம் கண் முன்னால் இருக்க வேண்டும்.

முதலில் 'ஹம்து' என்பதன் பொருளும், பிறகு அல்லாஹ் 'மஜீது' ஆக இருக்கின்றான் என்பதன் பொருளும் கூறப்பட்டு விட்டது. பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: அவன் 'அஸீஸ்' அதாவது ஆற்றல்களின் எஜமானனாக இருக்கின்றான். ஆற்றல் படைத்த எல்லாரையும் விட அதிகமாக ஆற்றல் உள்ளவனாக அவன் இருக்கின்றான். அவன் தோல்வியுறச் செய்ய முடியாதவனாக இருக்கிறான். அதாவது அவனை தோற்கடிப்பது சாத்தியமற்ற ஒன்றாகும். எல்லா கண்ணியங்களும் அவனுக்கே உரியன. அவனது மதிப்பிற்கும் எந்தவோர் இணையும் இல்லை. அவன் எல்லா பொருள்களின் மீதும் மிகைத்து நிற்கக் கூடியவனாக இருக்கின்றான். அவனைப் போன்று யாரும் இருக்க முடியாது. இதுவே 'அஸீஸ்' என்பதன் பொருளாகும்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: அவன் 'அலீம்' ஆக இருக்கின்றான். அதாவது எல்லாவற்றையும் பற்றி அறிந்தவனாக அவன் இருக்கின்றான். நடந்தவை பற்றியும் அறிந்தவ –னாக அவன் இருக்கின்றான். அவனிடத்தில் இருந்து எந்தவொரு பொருளும் மறைவாக இல்லை. அவனது அறிவு முழுமையாக எல்லாப் பொருள்களையும் சூழ்ந்து நிற்கின்றது. அந்த இறைவனே இந்த வேதத்தை இறக்கியுள்ளான். அதாவது திருக்குர்ஆனை அவன் இறக்கியுள்ளான். அவனே இந்த இறுதி ஷரீஅத்தை இறக்கியுள்ளான். அவன் இந்த வேதத்தின் மூலமாக காலங்களின் தேவைகள் பற்றிய அறிவை நமக்கு வழங்கியுள்ளான். இப்போது எல்லா வகையான பாதுகாப்பும் வெற்றியும் இந்த வேதத்திற்கு ஏற்ப உண்மையான முறையில் செயல்படுவதன் மூலமாகவே கிடைக்கும். பிறகு அல்லாஹ் அவன் காஃபிரிஸ் ஸம்பி – பாவங்களை மன்னிப்பவனாக இருக்கின்றான் என்று கூறுகின்றான். அவன் முன்னால் குனிந்தவாறு பாவங்களுக்காக மன்னிப்பு கேட்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதற்கு பல இடங்களில் விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதாவது நமது பாவங்களுக்காக எப்போதும் பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் ஒருமுறை இவ்வாறு கூறினார்கள்: ''மனிதனுக்கு கிடைக்கக் கூடிய ஒளி தற்காலிகமானதாக இருக்கின்றது. அதாவது எந்தவொரு மார்க்க அல்லது ஆன்மீக ஒளியாக இருந்தாலும் அது தற்காலிகமானதாக இருக்கின்றது. அதை எப்போதும் தன்னுடன் வைத்திருப்பதற்கு இஸ்திக்ஃபாரின் தேவை இருக்கின்றது.''

அவர்கள் கூறுகின்றார்கள்: ''நபிமார்கள் செய்கின்ற இஸ்திக்ஃபாருக்கும் இதுவே காரணமாக இருக்கின்றது. அவர்கள் இந்த விஷயங்களைப் பற்றி தெரிந்திருக்கின்றார்கள். நமக்கு வழங்கப்பட்டுள்ள ஒளியின் போர்வையானது அது நம்மை விட்டுப் பறிக்கப்பட்டு விடக் கூடாதே என்ற அபாயம் அவர்களுக்கு இருந்து வருகின்றது.''

அவர்கள் கூறுகின்றார்கள்: ''இஸ்திக்ஃபார் என்பதன் பொருள் இதுவேயாகும். அதாவது இறைவனிடமிருந்து இப்போது கிடைத்திருக்கும் ஒளி பாதுகாப்பாக இருக்க வேண்டும். அது மேலும் அதிகமாக கிடைக்க வேண்டும். அதை பெறுவதற்கு ஐவேளை தொழுகையும் இருக்கின்றது.'' தொழுகையும் இதன் ஒரு பகுதியாகும். அந்த ஒளியைப் பெறுவதற்கு தொழுகை இருக்கின்றது. தொழுகையிலும் மனிதன் தனது பாவங்களிலிருந்து தவ்பா செய்கின்றான். பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்கின்றான். அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பைக் கேட்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''அதன் மூலமாக ஒவ்வொரு நாளும் உள்ளம் திறந்து அவன் இறைவனிடம் கேட்க வேண்டும். எவருக்கு அகப்பார்வை இருக்கின்றதோ அவர் தொழுகை ஒரு மிஃராஜ் – ஏணிப்படியாக இருக்கின்றது என்பதை அறிந்திருக்கின்றார். தொழுகையில் மன்றாடுதல் மற்றும் உருக்கத்தினால் நிறைந்துள்ள அந்த துஆவின் மூலமாகவே அவர் இந்த நோய்களிலிருந்து தப்பிக்க முடியும்.'' (மல்.'.பூஸாத் தொகுதி 7 பக்கம் 124-125; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) இந்த பௌதீக, ஆன்மீக நோய்களிலிருந்து தப்பிப்பதற்கு துஆக்களின் தேவை இருக்கின்றது. துஆக்களில் இஸ்திக்ஃபாரின் தேவை இருக்கின்றது. தொழுகையும் கூட இதன் ஒரு பகுதியேயாகும். இந்த வசனங்களை ஓதும்படி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதன் காரணமாக இதை ஓதுவதால் மட்டும் எதுவும் நடந்து விடாது. மாறாக, செயலளவிலான நிலைமையையும் சிறந்ததாக ஆக்க வேண்டும். எவ்வாறு நாம் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும்? எவ்வாறு நாம் நமது தொழுகைகளைப் பாதுகாக்க வேண்டும்? என்பதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் நாமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் இஸ்திக்ஃபார் தொடர்பாக மேலும் விளக்கமளித்தவாறு ஒரு சமயத்தில் இவ்வாறு கூறினார்கள்: ''இஸ்திக்ஃபாரின் பொருள் இதுவேயாகும். அதாவது வெளிப்படையாக எந்தவொரு பாவமும் நிகழ்ந்து விடக் கூடாது. பாவங்களைச் செய்கின்ற ஆற்றல் வெளிப்படவே கூடாது'' அதாவது எதனால் பாவங்கள் நிகழ முடியுமோ அந்த சந்தர்ப்பமே உருவாகக் கூடாது; அதற்கான ஆற்றலே உருவாகக் கூடாது. ''நபிமார்களின் இஸ்திக்ஃபாரின் உண்மை நிலையும் இதுவேயாகும். அவர்கள் பாவம் செய்யாதவர்களாகத்தான் இருக்கின்றனர். ஆனால், அவர்கள் இஸ்திக்ஃபார் ஏன் செய்கின்றனர்? என்றால் அதன் மூலமாக வருங்காலத்தில் (பாவம் செய்வதற்கான) அந்த ஆற்றல் வெளிப்பட்டு விடக் கூடாது. பொதுமக்களுக்காக வரும்போது இஸ்திக்ஃபாரின் இன்னொரு பொருள் எடுத்து கொள்ளப்படும்.'' பொதுமக்களுக்காக வரும் போது இஸ்திக்ஃபாரின் பொருள் இதுவாகும். ''அதாவது எந்த குற்றங்களும் பாவமும் நிகழ்ந்து விட்டதோ அதன் தீய விளைவுகளிலிருந்து இறைவன் காப்பாற்ற வேண்டும். மேலும் அந்த பாவங்களை மன்னிக்க வேண்டும். அத்துடன் வருங்காலத்தில் பாவங்களிலிருந்து நம்மைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும்''.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''எந்நிலையிலும் இஸ்திக்ஃபார் செய்வதில் எப்போதும் ஈடுபட்டுக் கொண்டிருப்பது மனிதன் கட்டாயமாக செய்ய வேண்டிய விஷயமாகும். இந்த பஞ்சம் மற்றும் உலகில் இறங்குகின்ற பல்வேறு துன்பங்கள் பற்றிய கருத்து இதுவேயாகும். அதாவது மக்கள் இஸ்திக்ஃபார் செய்வதில் ஈடுபட வேண்டும்.''

மனிதன் துன்பங்களில் சிக்கிக் கொள்ளும்போது அல்லது அஹ்மதிகள் மீது துன்பங்கள் வரும்போது அவர்கள் துஆக்கள் செய்வதன் பக்கமும் இஸ்திக்ஃபாரின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால், அஸ்தக்ஃபிருல்லாஹ் அஸ்தக்ஃபிருல்லாஹ் என்று கூறிக்கொண்டிருப்பது இஸ்திக்ஃபாரின் கருத்து அல்ல. உண்மையில் வெளிநாட்டிலுள்ள மொழியில் இது கூறப்பட்டிருப்பதால் (அதாவது அரபியில் கூறப்பட்டிருப்பதால்) இதன் உண்மை மக்களுக்கு மறைவாக இருந்து விட்டது. அரபு நாட்டு மக்கள் இவ்விஷயங்களை நன்கு புரிந்திருந்தார்கள். ஆனால், நமது நாட்டில் அந்நிய நாட்டின் மொழியில் இவை கூறப்பட்டிருந்ததனால் பல உண்மைகளும் மறைவாக இருந்து விட்டது. பல மக்களும் நாங்கள் இத்தனை முறை

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

இஸ்திக்ஃபார் செய்தோம். 100 தஸ்ஃபீஹ்களை அல்லது 1000 தஸ்ஃபீஹ்களை ஓதினோம் என்று கூறுகின்றனர் ஆனால், அவர்களிடம் இஸ்திக்ஃபாரின் பொருள் என்ன? அதன் கருத்து என்ன? என்று கேட்டால் அவர்களிடமிருந்து பதிலே வராது. அவர்கள் வாயடைத்துப் போய் விடுகின்றனர். மனிதன் உண்மையான முறையில் உள்ளத்தால் மனதளவில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். எந்த பாவங்கள் மற்றும் குற்றங்கள் என் மூலமாக நிகழ்ந்திருக்–கின்றனவோ அதற்கான தண்டனையை அவர்கள் சுவைக்கக் கூடாது. இனியும் உள்ளத்தால் மனதளவில் அல்லாஹ்விடமே எல்லா நேரமும் அவர் உதவி கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். இறைவன் வருங்காலத்தில் நல்ல பணிகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்க வேண்டும். பாவங்களிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நன்றாக நினைவில் கொள்ளுங்கள். வெறுமனே சொற்களால் எதுவும் நடந்து விடாது. உங்களது மொழியிலேயே நீங்கள் இஸ்திக்ஃபார் செய்யலாம். அதாவது, இறைவன் கடந்த காலப் பாவங்களை மன்னிக்க வேண்டும். வருங்காலத்தில் பாவங்களிலிருந்து பாதுகாப்பாக வைக்க வேண்டும். மேலும், நன்மைகள் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்க வேண்டும். இதுவே உண்மையான இஸ்திக்ஃபார் ஆகும். வெறுமனே அஸ்தக்ஃபிருல்லாஹ் அஸ்தக்ஃபிருல்லாஹ் என்று கூறித் திரிய வேண்டிய அவசியமில்லை. மேலும், உள்ளம் அதன் உண்மை நிலையைப் பற்றி அறியாமலேயே இருக்கின்றது. (உள்ளத்திலும் இஸ்திக்ஃபாரினால் அந்த மென்மையும், உருக்கமும், எழுச்சியும் உருவாகாமல் இருந்தால், அச்சமும் இறைவனை பற்றிய பயமும் உருவாகாமல் இருந்தால் அதுவரை இதனால் எந்தப் பலனும் இல்லை. உள்ளத்தில் ஓர் எழுச்சி உருவாக வேண்டும்.)

அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். உள்ளத்திலிருந்து வெளி வருகின்ற விஷயங்களே இறைவனை சென்றடைகின்றது. உங்களது மொழியிலேயே இறைவனிடம் அதிகமாக துஆக்களைக் கேட்க வேண்டும். அதனால் உள்ளத்திலும் தாக்கம் ஏற்படுகின்றது. நாவு உள்ளத்திற்கு சாட்சி கூறக் கூடியதாக மட்டுமே இருக்கின்றது. உள்ளத்தில் எழுச்சி உருவானால் அத்துடன் நாவும் அதனோடு சேர்ந்து கொண்டால் அது நல்ல விஷயமாகும். உள்ளம் ஈடுபடாமல் வெறுமனே நாவால் மட்டும் செய்யப்படும் துஆக்கள் பயனற்றவையும் வீணானவையும் ஆகும். எனினும், உள்ளத்தால் செய்யப்படும் துஆக்கள் அசல் துஆக்களாக இருக்கின்றன. துன்பம் வருவதற்கு முன்புள்ள நேரத்தில் மனிதன் உள்ளத்தால் மனதளவில் இறைவனிடம் துஆக்கள் செய்து கொண்டிருக்கின்றான். இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருக்கின்றான் என்றால் பிறகு பரிவு காட்டக்கூடிய கருணைமிக்க இறைவன் மூலமாக அந்த துன்பம் அகன்று விடுகின்றது. (துன்பங்கள் துயரங்கள் வந்த பிறகு துஆக்கள் கேட்கின்ற நிலை இருக்கக் கூடாது. அதற்கு முன்னதாக துஆக்கள் செய்து கொண்டிருக்க வேண்டும்.)

அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு பரிவு காட்டக்கூடிய கருணைமிக்க இறைவன் மூலமாக அந்த துன்பம் அகன்று விடுகின்றது. ஆனால் துன்பம் இறங்கி விட்டால் பிறகு அது அகலவதில்லை. துன்பம் இறங்குவதற்கு முன்னதாக துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். இவ்வாறு இறைவன் துன்பத்தின் தருணத்தில் நம்மை பாதுகாப்பாக வைக்கின்றான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "நமது ஜமாஅத் தங்களிடம் தனிச்சிறப்புமிக்க ஏதாவதொரு விஷயத்தையும் காட்ட வேண்டும். ஏதாவதொரு வித்தியாசம் தென்பட வேண்டும். ஒரு நபர் பைஅத் செய்து விட்டு சென்ற பிறகு எந்தவொரு தனிச்சிறப்புமிக்க விஷயத்தையும் அவரிடம் காட்டவில்லையென்றால் தனது மனைவியிடம் முன்னர் நடந்து கொண்டது போன்றே இப்போதும் நடக்கின்றார் என்றால், தனது குடும்பத்தினருடனும் பிள்ளைகளுடனும் இதற்கு முன்னர் நடந்து கொண்டது போன்றே இப்போதும் நடக்கின்றார் என்றால், பிறகு இது நல்ல விஷயமல்ல. பைஅத் செய்த பிறகும் அதே தீய ஒழுக்கமும் தீய நடத்தையும் அவரிடம் இருந்தால், முன்னர் இருந்த அதே நிலைமை அவரிடம் இப்போதும் இருந்தால் பிறகு பைஅத் செய்ததனால் என்ன பயன் ஏற்படும்? பைஅத் செய்த பிறகு அந்நியர்களுக்கும் தமது உறவினர்களுக்கும் அண்டை வீட்டுக்காரர்–களுக்கும் எத்தகைய முன்மாதிரியை அவர் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்றால் இப்போது முன்னர் இருந்த அந்த மனிதர் இவர் அல்ல என்று அவர்கள் கூற வேண்டும்."

அவர்கள் கூறுகின்றார்கள்: "நன்றாக நினைவில் கொள்ளுங்கள். தூயவர்களாக மாறி செயல்பட்டால் மற்றவர்கள் மீது கண்டிப்பாக உங்களைப் பற்றிய திகில் ஏற்படும். பெருமானார் (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய திகில் எந்த அளவு பெரிதாக இருந்தது? ஒருமுறை நிராகரிப்பவர்–களுக்கு, பெருமானார் (ஸல்) அவர்கள் தீய துஆ செய்வார்களோ என்ற அச்சம் உருவானது. அப்போது நிராகரிப்பவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்களிடம் வந்து நீங்கள் தீய துஆ செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர். உண்மையான மனிதரின் திகில் கண்டிப்பாக இருக்கின்றது. எனவே, தூயவர்களாக மாறி செயல்பட வேண்டும். அதனை இறைவனுக்காக செய்ய வேண்டும். அப்போது கண்டிப்பாக மற்றவர்கள் மீது உங்களது திகில் மற்றும் தாக்கம் ஏற்படும்." (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 372-374; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே, இஸ்திக்ஃபார் செய்வதும் அதன் ஆன்மாவைப் புரிந்து கொள்கின்ற அறிவையும் உருவாக்கக் வேண்டியது அவசியமானதாகும்.

திக்ர்களும் துஆக்களும் எப்போது பயன் தரும் என்றால் அத்துடன் செயலளவிலான நிலைமையையும் சிறந்ததாக ஆக்குவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். மக்கள் நாங்கள் ஓதுவதற்கு ஏதாவது சிறிய துஆவைக் கூறுங்கள் என்று கூறுகின்றனர். சிறிய துஆவும் கூட அத்துடன் சேர்த்து கடமையானவற்றையும் நாம் நிறைவேற்றும்போதுதான் நமக்கு பயன்தரக் கூடியதாக இருக்கும். தொழுங்கள்; அதை குறித்த நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். முறையாக தொழுகைகளைப் பேண வேண்டும். ஆர்வத்துடன் அதை நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் திக்ர் செய்வதும் பயனளிக்க கூடியதாக இருக்கும்.

அடுத்து அல்லாஹ்வின் இன்னொரு பண்பான காஃபிரிஸ் ஸம்பி – அவன் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாவன் என்பது இங்கு கூறப்பட்டிருக்கின்றது. தவ்பா என்பதன் பொருள் தமது பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டவாறு அல்லாஹ்வின் பக்கம் திரும்புவதாகும். இனி வருங்காலத்தில் நான் பாவம் செய்ய மாட்டேன். எப்போதும் பாவங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்வேன் என்று உடன்படிக்கை செய்தவாறு அல்லாஹ்வின் முன்னிலையில் வருகின்றபோது அல்லாஹ் இந்த உணர்வுடனும் எண்ணத்துடனும் தன் பக்கம் வருபவர்களது தவ்பாவை ஏற்றுக் கொள்கின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த கருத்தைக் கூட ஓரிடத்தில் இவ்வாறு விளக்கிக் கூறியுள்ளார்கள்: ஜுமுஆ மற்றும் இருபெருநாள்களை விடவும் சிறந்த மற்றும் அருளுக்குரிய அந்த நாள் எந்த நாள்? அது பற்றி நான் உங்களுக்கு கூறுகின்றேன். அந்த நாள் மனிதன் தவ்பா செய்கின்ற நாளாகும். அந்த நாள் எல்லா நாள்களை விடவும் மிகப்பெரிய நாளாக இருக்கின்றது. ஏனென்றால், அந்த நாளில் மனிதனை நரகத்திற்கு அருகில் கொண்டு செல்லக்கூடிய, உள்ளுக்குள்ளேயே அவனை இறைவனின் கோபத்தின்கீழ் கொண்டு வருகின்ற அவனது தீய செயல்களின் பதிவேடு

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

கழுவப்படுகின்றது. மேலும், அவரது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. உண்மையில் மனிதனுக்கு அதை விட பெரிய மகிழ்ச்சிகரமான நாளாகவும் பெருநாளாகவும் வேறு எந்த நாள் இருக்க முடியும்? அது நிரந்தர நரகத்தில் இருந்தும் நிரந்தரமான இறைகோபத்திலிருந்து அவனுக்கு இரட்சிப்பை வழங்குகின்றது.

முதலில் இறைவனை விட்டு தொலைவிலும் அவனது கோபத்திற்கு இலக்காகியும் இருந்த தவ்பா செய்கின்ற பாவிகள் இப்போது அவனது அருளால் அவனுக்கு அருகில் இருக்கின்றனர். அவனது நரகம் மற்றும் அவனது தண்டனையில் இருந்து அவர்கள் அகற்றப்படுகின்றனர். அதைப் பற்றியே இறைவன் إِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِيْنَ நிச்சயமாக அல்லாஹ் தவ்பாவை ஏற்றுக் கொள்ள வைப்பவர்களின் நண்பனாக இருக்கின்றான். மேலும் தூய்மையை விரும்புகின்ற அந்த மக்களை நேசிக்கின்றான் என்று கூறுகின்றான். (2:223) இந்த வசனத்திலிருந்து தவ்பா செய்பவர்களை அல்லாஹ் தனது நேசத்திற்குரியவராக ஆக்கு–கின்றான் என்ற கருத்து மட்டும் கூறப்படவில்லை. மாறாக, உண்மையான தவ்பாவுடன் உண்மையான தூய்மையும் பரிசுத்தமும் நிபந்தனையாகக் கூறப்பட்டிருக்–கின்றது. எந்த தவ்பாவுடன் உண்மையான தூய்மையும் இருக்கின்றதோ அதுவே உண்மையான தவ்பாவாகும். எண்ணத்தை மனிதன் உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். அதாவது எதிர்காலத்தில் நான் பாவம் செய்யக் கூடாது என்ற எண்ணத்தில் உறுதியாக இருக்க வேண்டும். இது இருந்தால்தான் தூய்மையும் பரிசுத்தத் தன்மையும் அவரிடம் இருந்தால்தான் தவ்பாவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எல்லா விதமான அசுத்தத்திலிருந்தும் அழுக்கிலிருந்தும் விலகியிருப்பது கண்டிப்பான நிபந்தனையாகும். அது அல்லாமல் வெறுமனே தவ்பா செய்வதாலும், சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறுவதாலும் எந்தப் பயனும் ஏற்பாடாது. எனவே, எந்த நாள் அத்தகைய அருளுக்குரிய நாளாக இருக்குமோ, அந்நாளில் மனிதன் தனது தீய செயல்களிலிருந்து தவ்பா செய்தால், அல்லாஹ்வுடன் உண்மையான உடன்படிக்கையை செய்தவாறு அவனுடன் சமாதானம் செய்து கொண்டால், அவனது கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக தமது தலையைக் குனிய வைத்தால் பிறகு அவனது தீய செயல்களின் விளைவாக மறைவான முறையில் அவனுக்காக தயாராகிக் கொண்டிருக்கின்ற தண்டனையிலிருந்து அவன் காப்பாற்றப்படுவான் என்பதில் என்ன சந்தேகம் இருக்கின்றது? இதன் மூலமாக அவன் எதிர்பார்க்காத, அவனுக்கு நம்பிக்கையே இல்லாமல் இருந்த அந்த பொருளை அவன் பெற்றுக் கொள்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சுயமே இதை நீங்கள் யூகிக்க முடியும். ஒரு நபர் ஒரு பொருளை பெறுவதிலிருந்து முற்றிலும் அவநம்பிக்கை அடைந்து விட்ட நிலையில் தனது நோக்கத்தை அடைந்து விட்டால் அவருக்கு எந்த அளவு மகிழ்ச்சி ஏற்படும்? அவரது உள்ளம் ஒரு புத்தம் புது வாழ்க்கையைப் பெறும். இதன் காரணமாகவே நபிமொழிகளில் இது பற்றி கூறப்பட்டிருக்கின்றது. நபிமொழிகளிலிருந்தும் கடந்த கால வேதங்களிலிருந்தும் இதுவே தெரிய வருகின்றது. அதாவது மனிதன் பாவத்தின் மரணத்திலிருந்து வெளியேறி தவ்பாவின் மூலமாக புது வாழ்க்கையைப் பெறும்போது அல்லாஹ் அவரது வாழ்க்கையில் மகிழ்ச்சி அடைகிறான். உண்மையில் இது மகிழ்ச்சிக்குரிய விஷயமேயாகும். அதாவது மனிதன் பாவங்களின் கீழ் அமுக்கப்பட்டு எல்லா தரப்பிலிருந்தும் அழிவும் மரணமும் அவனுக்கு அருகில் இருக்கும்போது மேலும் இறை தண்டனை அவனை தின்று விடுவதற்குத் தயாராக இருக்கும்போது அவன் திடீரென்று இறைவனை விட்டு தொலைவில் கொண்டு செல்லக்கூடிய, அவனை விட்டுப் பிரிவதற்கு காரணமாக இருக்கின்ற அந்த தீமைகளிலிருந்தும் தீய செயல்களிலிருந்தும் தவ்பா செய்தவாறு இறைவன் பக்கம் வந்து விட்டால் அந்த நேரம் இறைவன் மகிழ்ச்சியடையும் நேரமாக இருக்கின்றது. வானத்தில் மலக்குகளும் கூட இதனால் மகிழ்ச்சி அடைகின்றனர். ஏனென்றால், தனது எந்தவோர் அடியானும் அழிந்து போவதை அல்லாஹ் விரும்புவதில்லை. மாறாக அவனது அடியானிடத்தில் ஏதாவது தவறு அல்லது பலவீனம் கூட வெளிப்பட்டிருந்தாலும் பிறகும்கூட அவன் தவ்பா செய்தவாறு பாதுகாப்பில் நுழைந்து விட வேண்டும் என்றே அவன் விரும்புகின்றான்.

எனவே, நினைவில் கொள்ளுங்கள். எந்த நாளில் மனிதன் தனது பாவங்களிலிருந்து தவ்பா செய்கின்றானோ அந்த நாள் மிகவும் அருளுக்குரிய நாளாகும். அது எல்லா நாட்களை விடவும் சிறந்த நாளாகும். அந்த நாளில் அந்த மனிதன் புது வாழ்க்கையைப் பெறுகின்றான். அல்லாஹ்விற்கு அருகில் கொண்டு செல்லப்படு–கின்றான். எனவே, இன்று நான் எனது எல்லா பாவங்களிலிருந்தும் தவ்பா செய்கின்றேன் என்று நீங்கள் உறுதிமொழி கூறியுள்ள இந்த நாள் (அதாவது பைஅத் செய்த நாள்) எதிர்காலத்தில் எனது புரியும் திறனுக்கும் எனக்கு இருக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப என்னால் இயன்ற வரை பாவங்களிலிருந்து தவிர்ந்திருப்பேன் என்று நீங்கள் உறுதிமொழி எடுத்த அந்த நாள் தவ்பாவின் நாளாகும். அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஏற்ப தனது உள்ளத்தால் தவ்பா செய்துள்ள ஒவ்வொரு நபரும், ஆனால் எவர் உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்துள்ளாரோ அவரது கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன என்று நான் உறுதியாக நம்புகின்றேன். அவன் اَلتَّائِبُ مِنَ الذَّنْبِ كَمَنْ لَّا ذَنْبَ لَهٗ அதாவது பாவத்தில் இருந்து தவ்பா செய்தவர் பாவம் செய்யாதவர் போன்றவராவார் என்ற கூற்றிற்கு கீழே வந்து விட்டார். ஒரு வகையில் அவர் எந்த பாவமும் செய்யவில்லை என்று நம்மால் கூற முடியும். எனினும் அதற்கு உண்மையான தூய்மை மற்றும் உண்மையான பரிசுத்தத் தன்மையின் பக்கம் அடியெடுத்து வைத்து முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனை இருக்கின்றது. மேலும் இந்த தவ்பா வெறுமனே வார்த்தைகளால் மட்டும் கூறப்படுகின்ற தவ்பாவாக இருக்கக் கூடாது. மாறாக, அது செயலின் கீழ் வந்து விட வேண்டும். ஒருவரது பாவங்கள் மன்னிக்கப்–படுவது என்பது ஒரு சிறிய விஷயமல்ல. மாறாக, இது ஒரு மகத்தான விஷயமாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதர்களில் எவராவது ஒருவர் ஒரு குற்றம் புரிந்தால் அல்லது தவறு செய்தால் சில நேரங்களில் அதனால் ஏற்படும் பகைமை பல தலைமுறைகள் வரை நீடிக்கின்றது. அந்த நபர் ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறை வரை தனது எதிரியை தேடிக் கொண்டே இருக்கின்றார். சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த எதிரியை பழிவாங்கி விட வேண்டும் என்று நினைக்கின்றார். ஆனனால் அல்லாஹ் மிகவும் கருணை காட்டுபவனும் பரிவுடன் நடந்து கொள்பவனுமாவான். மனிதனை போன்று அவன் கடின உள்ளம் கொண்டவன் அல்ல. அதாவது மனிதன் இன்னொரு மனிதன் செய்த பாவத்திற்காக பல தலைமுறைகள் வரை அவனை பின்தொடர்ந்து செல்வதை விட்டு விடுவதில்லை. அவனை அந்த மனிதன் அழிக்க விரும்புகின்றான். ஆனால் அல்லாஹ் அப்படிப்பட்டவன் அல்லன். அந்த கருணை மிக்க பரிவுடன் நடந்து கொள்கின்ற இறைவன் 70 வருடங்களாக செய்யப்பட்டிருக்கும் பாவங்களை ஒரு வார்த்தையைக் கூறுவதனால் ஒரே நொடிப்பொழுதில் மன்னித்து விடுகின்றான். அவ்வாறு மன்னிப்பதால் மனிதனுக்கு எந்தப் பயனும் இல்லை என்று கருத வேண்டாம். மாறாக, அவ்வாறு மன்னிப்பது அவனுக்கு உண்மையிலேயே பயன்தரக் கூடியதாக இருக்கின்றது. இதனை உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்கின்ற

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family
restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

–வர்கள் உணர்கின்றனர். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 148-150; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே இத்தகைய உண்மையான தவ்பா தான் பிறகு நமது பாதுகாப்பிற்கான ஏற்பாட்டைச் செய்கின்றது. இந்த நிலை ஏற்படவில்லை என்றால் பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: அவன் شَدِيْدُ الْعِقَابِ ஆக இருக்கின்றான். அதாவது மனிதன் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பொருட்படுத்தாமல் இருக்கும்போது பிறகு அல்லாஹ் அவனுக்கு தண்டனையும் வழங்குகின்றான். பிறகு கூறுகின்றான்: அவன் 'ஸித்தவ்ல்' ஆக இருக்கின்றான். அதாவது அவன் அதிகமாக வழங்குபவன் ஆவான். மனிதனுக்கு பயன் தருவதில் அதன் உச்சத்தை அல்லாஹ் தொட்டு விடுகின்றான். அவனது கொடைக்கு எந்த எல்லையும் இல்லை. ஏனென்றால், அவனிடம் ஆற்றல் இருக்கின்றது. அவனால் அனைத்தையும் வழங்க முடியும். அவனது கருவூலம் எல்லையற்ற ஒன்றாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: எனது இந்த பண்புகளை நினைவில் கொள்ளுங்கள். அதன் மூலமாக எப்போதும் நீங்கள் அருளைப் பெற்றுக் கொண்டே இருப்பீர்கள். அவனைத் தவிர இந்த அளவு ஆற்றலைக் கொண்டுள்ள வேறு எவரும் இல்லை. நாம் இந்த உலகிலும் மரணித்த பிறகும் அவன் பக்கமே செல்ல வேண்டியதுள்ளது. எனவே, இறுதியில் இறைவன் பக்கமே நாம் திரும்ப வேண்டியதுள்ளது என்ற இந்த உணர்வு இருந்தால் பிறகு நன்மைகளை செய்வதன் பக்கமும் அவனது கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படுவதன் பக்கமும் நமது கவனம் இருக்கும். இந்த நிலைமை ஏற்பட்டு விட்டால் பிறகு இறைவன் நிச்சயமாக நம்மை பாதுகாக்கின்றான்.

பிறகு நான் ஓதிய மற்ற வசனம் தொடர்பாக ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறும் கவனமூட்டியுள்ளார்கள். அது ஆயத்துல் குர்ஸியுடன் தொடர்புடையதாகும். ஹதீஸில் இது பற்றி இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு சிகரம் இருக்கின்றது. திருக்குர்ஆனின் சிகரம் சூரா அல் பக்கராவாகும். அதில் அத்தகைய ஒரு வசனம் இருக்கின்றது. அது திருக்குர்ஆனின் எல்லா வசனங்களின் தலைவராக இருக்கின்றது. அது ஆயத்துல் குர்ஸி ஆகும். (சுனன் திர்மிதி. அப்வாபு ஃபஸாயிலில் குர்ஆன் பாபு மாஜாஅ ஃபீ ஃபஸ்லி சூரத்தில் பகரா வ ஆயத்தில் குர்ஸி. ஹதீஸ் 2878)

இதனை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ اَلْحَيُّ الْقَيُّوْمُ அவனே அந்த இறைவன் ஆவான். அவனை தவிர வேறு எவரும் இல்லை. அவனே ஒவ்வோர் உயிரின் உயிராகவும் உயிருடன் இருக்கின்ற ஒவ்வொன்றிற்கும் ஆதரவு அளிப்பவனாகவும் இருக்கின்றான். இந்த வசனத்தின் சொற்பொருள் இதுவாகும். அந்த இறைவன் மட்டும்தான் என்றென்றும் உயிருடன் இருப்பவன். அவன் மட்டும்தான் தானே நிலைத்திருப்பவன். இதிலிருந்து தெளிவாக தெரிவது என்னவென்றால் அவனை தவிர எவரெல்லாம் உயிருடன் தென்படுகின்றனரோ அவர்கள் அவனது வாழ்வின் மூலமே உயிருடன் இருக்கின்றனர். வானங்களிலும் பூமியிலும் நிலைத்திருப்பவை எல்லாம் அவன் மூலமாகத் தான் நிலைத்திருக்கின்றன. (சஷ்மயே மஃரிஃபத். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 120)

பிறகு மேலும் விளக்கமளித்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் திருக்குர்ஆனில் இரண்டு பெயர்களை எடுத்துக் கூறியுள்ளான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவை அல் ஹய் மற்றும் அல் கய்யூம் ஆகும். அல் ஹய் என்பதன் பொருள், இறைவன் உயிருடன் இருப்பவன்; மற்றவர்களுக்கு வாழ்வை வழங்கக் கூடியவன். அல் கய்யூம் என்றால் தானே நிலைத்திருப்பவன் மற்றும் பிறர் நிலைத்திருப்பதற்கு அசல் காரணியாக விளங்குபவன். ஒவ்வொரு பொருளும் வெளிப்புறமாகவும் மற்றும் உட்புறமாகவும் நிலைத்திருப்பது, அதன் வாழ்க்கை ஆகியவை இந்த இரண்டு பண்புகள் மூலமாகத்தான் நடக்கின்றன. எனவே, ஹய் என்ற சொல் அவன் வணங்கப்பட வேண்டும் என்பதை வேண்டுகின்றது. இதன் தோற்றம் சூரா ஃபாத்திஹாவில் இய்யாக்க நஃபுது (நாங்கள் உன்னையே வணங்குகிறோம்) என்பதாகும். மேலும் அல் கய்யூம் – அவனிடம் ஆதரவைக் கேட்க வேண்டும் என்பதை விரும்புகிறது. இது இய்யாக்க நஸ்தயீன் (நாங்கள் உன்னிடமே உதவி கேட்கிறோம்) என்ற சொற்களில் கூறப்பட்டிருக்கின்றது. ஆன்மீகமான முறையில் உயிருடன் இருப்பதற்கும், அல் ஹய் என்ற பண்பிலிருந்து பயனடைய வேண்டும் என்றால் அவனை வணங்குவது அவசியமானதாகும். அவனை வணங்குவதற்கும் அவனிடம் உதவி கேட்பது அவசியமானதாகும். நாம் அவனை வணங்குபவர்களாக இருப்பதற்கான நல்வாய்ப்பை அவன் நமக்கு வழங்குவானாக.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஹய் என்ற சொல் இறை வணக்கம் செய்வதை ஏன் வேண்டுகின்றது என்றால், அவன்தான் படைத்தான். படைத்து விட்டு மனிதனை வெறுமனே அவன் விட்டு விடவில்லை. உதாரணமாக, கட்டடத்தைக் கட்டுகின்ற ஒருவர் கட்டடத்தைக் கட்டிய பிறகு இறந்து விட்டால் அதனால் கட்டடத்திற்கு எதுவும் ஆகிவிடப் போவதில்லை. ஆனால், மனிதனுக்கு இறைவனின் தேவை இருக்கின்றது. மனிதனுக்கு இறைவனின் தேவை எல்லா நிலையிலும் இருக்கின்றது. எனவே, அவனிடமிருந்து ஆற்றலை வேண்டுவது அவசியமானதாகும். இதுவே இஸ்திக்ஃபார் ஆகும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 217; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இஸ்திக்ஃபார் தொடர்பான கருத்து ஏற்கெனவே தெளிவாக விளக்கிக் கூறப்பட்டு விட்டது. அதாவது அல்லாஹ்விடமிருந்து கிடைக்கின்ற அருளின் ஒளியை தொடர்ந்து நீடித்திருக்கும்படி செய்வதற்கு இஸ்திக்ஃபாரின் தேவை இருக்கின்றது. இந்த இஸ்திக்ஃபாரே இபாதத் (இறைவணக்கம்) ஆக இருக்கின்றது. அதிலிருந்து ஆற்றல் வழங்கப்படுகின்றது. பிறகு ஆயத்துல் குர்ஸியில் ஷஃபாஅத் அதாவது பரிந்துரை தொடர்பான கருத்து கூறப்பட்டிருக்–கின்றது.

இந்தக் கருத்தை விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு மனிதனும் பிறருக்காக துஆ செய்யும்போது இதுவும்கூட ஒரு வகையிலுள்ள பரிந்துரையாகும். இது நம்பிக்கை கொண்டவரின் ஒரு பண்பாக இருக்க வேண்டும். அதை எப்போதும் அவர் மேற்கொண்டு நடக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: 'இறைவனின் அனுமதி இல்லாமல் எந்த பரிந்துரையையும் செய்ய முடியாது. இதனை அல்லாஹ் கூறி விட்டான். திருக்குர்ஆனின் அடிப்படையில் பரிந்துரை என்பதன் பொருள் ஒரு நபர் தனது சகோதரருக்காக துஆ செய்வதாகும். அதாவது அந்த சகோதரரின் அந்த நோக்கம் நிறைவேற வேண்டும் அல்லது அவருக்கு வருகின்ற ஏதாவது ஒரு துன்பம் அகன்று விட வேண்டும்''. துஆவிற்காக ஒருவர் கூறும்போது எந்த நோக்கத்திற்காக அவர் துஆ செய்யுமாறு கூறுகின்றாரோ அந்த நோக்கம் நிறைவேறவும், ஏதாவது துன்பம் ஏற்பட்டிருந்தால் அது அகன்று விடவும் துஆ செய்ய வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ''எனவே, திருக்குர்ஆனின் கட்டளை என்னவென்றால், எந்த நபர் இறைவன் முன்னிலையில் அதிகமாக குனிகின்றாரோ அவர் தனது பலவீனமான சகோதரருக்காக துஆ செய்ய வேண்டும். அதாவது அவருக்கும் அந்த தகுதி கிடைக்க வேண்டும். இதுவே பரிந்துரையின் உண்மை நிலையாகும். எனவே, நிச்சயமாக நாம் நமது சகோதரர்களுக்காக துஆ செய்கின்றோம். இறைவன் அவர்களுக்கு ஆற்றலை வழங்குவானாக. அவர்களது துன்பத்தை அகற்றுவானாக. இது அனுதாபத்துடன் நடந்து கொள்வதின் ஒரு வகையாகும்.'' (நஸீமே தஃவத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 463)

பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எல்லா மனிதர்களும் ஓர் உடலைப் போன்று இருப்பதால் இறைவன் நமக்கு இந்த விஷயத்தை மீண்டும் மீண்டும் கற்றுத் தந்துள்ளான். அதாவது பரிந்துரையை ஏற்றுக் கொள்வது அவனது வேலையாக இருந்தாலும் கூட நீங்கள் உங்களது சகோதரர்களுக்காக பரிந்துரை செய்வதில் அதாவது அவர்களுக்காக துஆ செய்வதில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருங்கள். ஷஃபாஅத்திலிருந்து அதாவது அனுதாபத்துடன் துஆ செய்வதிலிருந்து விலகிச் சென்று விடாதீர்கள். இது பரஸ்பரம் உங்களில் ஒருவருக்கு மற்றவர் மீது இருக்கின்ற உரிமையாகும். ஒருவர் மற்றவருக்காக துஆ செய்வது ஒருவருக்கு மற்றவர் மீது இருக்கின்ற உரிமையாகும். உண்மையில் ஷஃபாஅத் என்ற சொல் ஷஃபா என்ற சொல்லிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது. ஷஃபா இருமைக்கு கூறப்படும். அது ஒருமையின் எதிர் சொல்லாகும். மனிதன் முழுமையான அனுதாப உணர்வுடன் மற்றவருடன் இணைந்து அவரது ஜோடியாகி அவருக்காக தன்னை மாய்த்துக் கொள்ளும்

போது அவன் ஷஃபீ என்று அழைக்கப்படு–கின்றான். அவன் தனக்காக பாதுகாப்பை வேண்டுவது போன்றே பிறருக்காகவும் பாதுகாப்பை வேண்டுகின்றான். ஷஃபாஅத்தின் வடிவில் ஒருவரிடம் அனுதாப உணர்வு உருவாகாத வரை எந்தவொரு மனிதனின் மார்க்கமும் முழுமை அடைய முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். பரஸ்பரம் ஒருவருக்காக மற்றவரிடம் மிகவும் உச்சத்தை அடைந்துள்ள அனுதாப உணர்வு இருக்க வேண்டும்.

இன்னும் சொல்வதென்றால், மார்க்கத்தின் இரண்டு முழுமையான பகுதிகளே உள்ளன. ஒன்று, இறைவன் மீது அன்பு கொள்வதாகும். மற்றொன்று, மனித இனத்தின் மீது எந்த அளவு அன்பு கொள்ள வேண்டும் என்றால் மனித இனத்திற்கு ஏற்படுகின்ற துன்பத்தை தனது துன்பமாகக் கருத வேண்டும். மேலும் அவர்களுக்காக துஆ செய்ய வேண்டும். இதனையே வேறு சொற்களில் ஷஃபாஅத் என்று நாம் கூறுகின்றோம். (நஸீமே த:'வத். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 464) இந்த கருத்தை ஆயத்துல் குர்ஸியை படிக்கும்போது நாம் நம் முன்னால் வைக்க வேண்டும். அதன் மூலம் மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதற்கான உணர்வுகள் அதிகமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதுமாறு நமக்கு போதித்திருக்கும் போது இந்த வசனத்தில் நம்பிக்கை கொண்டவர்–களுக்கிடையிலுள்ள அனுதாப உணர்வுடன் கூடிய தொடர்புகளை நிலைநாட்ட வேண்டும் என்று குறிப்பாக கட்டளையிடப்பட்டிருக்கின்றது. பொதுவாக மனித குலத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதன் பக்கம் இவ்வசனத்தில் கவனமூட்டப்பட்டிருக்கின்றது. அதாவது, ஒவ்வொருவருக்காகவும் உங்களது உள்ளத்தில் அனுதாப உணர்வு இருக்க வேண்டும். ஆனால், துர்பாக்கிய நிலை என்னவென்றால் முஸ்லிம்கள் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரது இரத்தத்தின் தாகத்தை உடையவராக இருக்கின்றனர். ஆனால், திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிற்கு ஏற்ப செயல்படுபவர்களாக நாங்கள் இருக்கின்றோம் என்று அவர்கள் வாதம் செய்கின்றனர். எந்நிலையிலும் இதையும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். அதாவது, உண்மையான பரிந்துரையை செய்வதற்கான உரிமையை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கே வழங்கினான். அதன் காட்சிகளை அன்னாரது வாழ்க்கையில் நாம் பார்த்துள்ளோம்.

இதைப் பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்–றார்கள்: உலகில் பரிந்துரை செய்ததற்கான ஏதாவது ஒரு முன்மாதிரியைக் காட்டியவர்தான் மறுமையில் பரிந்துரை செய்பவராக இருக்கின்றார் என்று நிரூபிக்கப்படுபவராக இருக்கின்றார். இந்த அளவுகோலை நம் முன்னால் வைத்தவாறு நாம் மூஸா (அலை) அவர்களை பார்க்கும்போது அவர்கள் பரிந்துரை செய்பவர்களாக இருந்தது நிரூபணமாகின்றது. ஏனென்றால், எந்நிலையிலும் இறங்கிக் கொண்டிருந்த தண்டனையை தனது துஆவில் மூலமாக அவர்கள் அகற்றி விட்டார்கள். இதற்கு தவ்ராத் சாட்சியாக விளங்குகின்றது. இவ்வாறே நாம் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது பார்வையைச் செலுத்தும் போது அவர்கள் பரிந்துரை செய்பவர்களாக இருந்தது வெளிப்படையாக மிகவும் ஒளிமயமாகத் தென்படுகின்றது. ஏனென்றால், அவர்களின் பரிந்துரையின் தாக்கத்தினால்தான் அவர்களது ஏழை சஹாபாக்களை அன்னார் அரியணையில் அமர்த்தினார்கள். அவர்களின் பரிந்துரையின் காரணமாக எந்த மக்கள் சிலைகளை வணங்குவதிலும் இறைவனுக்கு இணை வைக்கின்ற செயல்களிலும் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தனரோ அவர்கள் எத்தகைய ஓரிறைமை கொள்கை உடையவர்களாக ஆகி விட்டனர் என்றால் அதற்கு நிகரான ஒன்று எந்தக் காலத்திலும் நமக்கு கிடைக்கவில்லை. அன்னாரது பரிந்துரையின் தாக்கத்தினால்தான் அன்னாரைப் பின்பற்றுபவர்கள் இன்று வரை இறைவனின் உண்மையான இல்ஹாமைப் பெறுகின்றனர். இறைவன் அவர்களுடன் பேசுகின்றான். ஆனால் மர்யமின் மகனான ஈஸாவிடம் இத்தகைய நிலைமைக்கான ஆதாரத்தை எவ்வாறு எங்கிருந்து நாம் பெற முடியும்?

அவர்கள் கூறுகின்றார்கள்: நமது எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் பரிந்துரைக்கு இதை விட வலுவான எந்த ஆதாரம் இருக்க முடியும்? நாம் அவர்கள் மூலமாக எதையெல்லாம் இறைவனிடம் இருந்து பெற்றோமோ அதனை நமது எதிரிகளால் பெற முடியவில்லை. நமது எதிரிகள் இதனை சோதித்துப் பார்ப்பதற்காக இந்த பரீட்சையில் கலந்து கொள்ள வருவார்களென்றால் சில நாட்களில் இதற்கான தீர்ப்பை நாம் பெற முடியும். (இஸ்மதே அன்பியா. ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 700)

பிறகு ஆயத்துல் குர்ஸியின் இறுதியில் அல்லாஹ்வின் இரண்டு பண்புகள் கூறப்பட்டிருக்–கின்றன. ஒன்று, அலி – மிகவும் மேலான மகிமையை உடையவன். அதற்கு மேலாக எவரது மகிமையும் இல்லை. அவனே பூமி மற்றும் வானத்தின் எஜமானனாக இருக்கின்றான். மேலும் அவன் அஸீம் ஆக இருக்கின்றான். அதாவது, அவனது மகத்துவம் மற்றும் உயர் தகுதியின் அந்தஸ்து எவ்வளவு உயர்வானது என்றால், அதுவரை எவரும் சென்றடைய முடியாது. அவனது மேலான மகிமை எல்லாவற்றையும் சூழ்ந்து நிற்கின்றது. எந்த ஒரு பொருளும் அவனது வட்டத்திலிருந்து வெளியில் இல்லை. இதுவே அவனது மகத்துவமும் உயர் தகுதியுமாகும்.

இந்த வசனத்தின் இறுதிப் பகுதியை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறைவனது ஆட்சி தொடர்பாக وَسِعَ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ وَلَا يَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِيُّ الْعَظِيْمُ என்ற வசனம் வருகின்றது. அதாவது இறைவனின் ஆட்சி வானம், பூமி ஆகியவற்றிலுள்ள அனைத்தையும் தன்னுள் அடக்கி வைத்திருக்–கின்றது. அவை அனைத்தையும் அவன் தாங்கி நிற்கின்றான். அவற்றை தூக்கிக் கொண்டு நிற்பதால் அவன் சோர்வடைந்து விடுவதில்லை. அவன் மிகவும் மேலானவன். எந்த அறிவும் அவனது ஆழம் வரை சென்றடைய முடியாது. அவன் மிகவும் பெரியவன். அவனது மகத்துவத்திற்கு முன்னால் எல்லா பொருள்களும் ஒன்றுமற்றதாகும். இதுவே இறைவனின் நாற்காலி பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதாகும். இது உருவகமாக சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது வானம், பூமி ஆகிய அனைத்தும் இறைவனது பிடியின் கீழ் இருக்கின்றது. இவை எல்லாவற்றையும் விட அவனது அந்தஸ்து மிகத் தொலைவில் இருக்கின்றது. அவனது மகத்துவத்திற்கு எல்லையே இல்லை. (சஷ்மயே ம:'ரி:'த். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 118 அடிக்குறிப்பு)

இதுவே அந்த மகத்துவமிக்க இறைவன் ஆவான். அவனது மகத்துவத்திற்கு எல்லைகள் இல்லை. அவன் எல்லைகளைக் கடந்து நிற்பவனாவான். அவன் எல்லா பொருள்களையும் சூழ்ந்து நிற்கின்றான். ஆனால் அவனுக்கு எந்த எல்லையும் இல்லை. இந்த விஷயங்களை மனிதன் புரிந்து கொண்டால் அவற்றை புரிந்து மனிதன் இந்த வசனங்களை ஓதினால் அதன் மூலமாகத் தான் மனிதன் அல்லாஹ்வின் மடியில் அமர முடியும். அவனது பாதுகாப்பின் கீழ் வர முடியும். அல்லாஹ்வின் முன் மனிதன் வருகின்றபோது அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதற்கு அவன் முயற்சி செய்கின்றான். இவ்வாறு முயற்சி செய்யவும் வேண்டும். இந்த உரிமைகள் செலுத்தப்படும்போது பிறகு இறைவனும் அவர்களைப் பாதுகாத்துக் கொண்டே இருக்கின்றான. எனவே, இந்த கருத்தை நம் கண் முன்னால் வைத்தவாறு இந்த வசனங்களை ஓதுபவர் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருப்பார் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு போதனை செய்ததற்கு ஏற்ப இந்த வசனங்களை ஓதுவது மட்டும் போதாது. மாறாக, இந்த வசனங்களின் கருத்துக்களை சிந்தித்தவாறு அந்த விஷயங்களை பேணி நடப்பதும் அவசியமான–தாகும். நமது செயலளவிலான நிலைமையையும் நாம் சிறந்ததாக ஆக்க வேண்டும்.

இந்த வசனத்திலுள்ள அறிவை நாம் பெற வேண்டும். அதை பற்றி திருக்குர்ஆனும் பல இடங்களில் விளக்கிக் கூறி இருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்களும் இது பற்றி கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களும் இந்த வசனங்களிலுள்ள கருத்தை நமக்கு விளக்கிக் கூறியுள்ளார்கள். இந்த விஷயங்கள் நம்மிடம் இருந்தால் பிறகு மனிதன் அல்லாஹ்வின் அருளால் அவனது பாதுகாப்பில்

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

இருப்பான். அல்லாஹ் நமக்கு இதற்கேற்ப நமது வாழ்க்கையை கழிப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

தொழுகைக்குப் பிறகு ஒருவருக்கு நான் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். இந்த ஜனாஸா மதிப்பிற்குரிய பேராசிரியர் அப்துல் காதில் டாரி சாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய ஆபிதா பேகம் சாஹிபா உடையதாகும். இவர்கள் பாகிஸ்தானிலுள்ள நவாப்ஷாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஜனவரி 22 ஆம் தேதி தமது 75 –வது வயதில் இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களது தந்தையாரின் பெயர் நியாஸ் முகம்மது கான் ஆகும். இவர்கள் அரசு அதிகாரியாக இருந்தார்கள். கிழக்குப் பாகிஸ்தானிலும் பிறகு கராச்சியிலும் Chief Comissioner ஆக இருந்தார்கள். ஆனால் இவர்கள் அஹ்மதியாக இருக்கவில்லை. ஆபிதா பேகமின் தாயார் அஹ்மதியாக இருந்தார். பிறகு சந்ததிகளில் ஆபிதா பேகம் அவர்கள் அஹ்மதிய்யதை தழுவினார்கள். 1963 –ல் இவர்கள் பைஅத் செய்தார்கள். அதற்கு பிறகு அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத்தும் செய்தார்கள். இவர்கள் B.A படித்து முடித்த பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பேராசிரியர் அப்துல் காதிர் டாரி சாஹிபுடன் இவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இவர்களுக்கு அல்லாஹ் ஐந்து மகள்களையும் ஒரு மகனையும் வழங்கி இருந்தான். நவாப்ஷா நகரத்தின் லஜ்னா தலைவியாக இவர்கள் இருந்தார்கள். பிறகு நீண்ட காலம் வரை நவாப்ஷா மாவட்டத்தின் லஜ்னா தலைவியாகவும் இவர்கள் இருந்தார்கள். அதிகமாக ஜமாஅத்திற்கு தொண்டாற்று –வதற்கான வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. லஜ்னா தலைவியாக இருந்தபோது எல்லா லஜ்னாக்களுடனும் இவர்கள் தொடர்பு வைத்திருந்தார்கள். மாவட்டத்தின் தொலைதூரப் பகுதிகளில் இவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வந்தார்கள். வசதியுள்ள குடும்பத்துடன் தொடர்புடையவர்களாக இவர்கள் இருந்தும் கூட சுயமே மிகவும் எளிமையான இயல்பை உடையவர்களாக இவர்கள் இருந்தார்கள். பலவீனமானவர்களுக்கும் ஏழைகளுக்கும் இவர்கள் உதவி செய்து வந்தார்கள். இத்தகைய அஹ்மதி குடும்பங்களை கண்டிப்பாக நேரில் சென்று இவர்கள் பார்த்து வந்தார்கள். தப்லீகில் இவர்களுக்கு மிகவும் ஆர்வம் இருந்தது. நவாப்ஷாவை சார்ந்த ஏறக்குறைய 17 பெண்களுக்கு இவர்கள் தப்லீக் செய்து அவர்களை பைஅத் செய்ய வைத்தார்கள். வீட்டிற்கு அக்கம் பக்கத்தில் வசித்து வந்த குழந்தைகளுக்கு இவர்கள் திருக்குர்ஆனைக் கற்று கொடுத்தார்கள். இவர்களது கணவருக்கு சிந்தி மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்வதற்கான நற்பேறு கிடைத்தது. அவர்கள் நவாப்ஷா நகரத்தின் அமீராகவும் இருந்தார்கள். பிறகு நவாப் ஷா மாவட்டத்தில அமீராகவும் இருந்துள்ளார்கள். இன்றைய நாட்களில் இவர்களது மகன் மாவட்டத்தின் அமீராக இருக்கின்றார்கள். இவர்களது பிள்ளைகளை இவர்கள் உயர் கல்வி கற்க வைத்தார்கள். மிக அதிகமாக இறைவனை வணங்க கூடியவராகவும், தைரியமிக்கவராகவும், பொறுமையைக் கடைபிடிப் –பவராகவும், நன்றி செலுத்தக் கூடியவராகவும் இவர்கள் இருந்தார்கள். எளிமையான இயல்பை உடையவராகவும் அர்ப்பணிப்பு மனப்பாங்குள்ள பற்றுறுதிமிக்க பெண்ணாகவும் இவர்கள் இருந்தார்கள். ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் மிகவும் அன்பும் மற்றும் பற்றுறுதிமிக்க தொடர்பு இவர்களுக்கு இருந்தது.

இவர்களது மகள் எழுதுகின்றார்: இவர்கள் ஒவ்வொரு பணியிலும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டலைப் பெற முயற்சி செய்து வந்தார்கள். எதுவரையென்றால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். கால்களில் எத்தகைய காயம் ஏற்பட்டிருந்தது என்றால், சர்க்கரை நோயின் காரணமாக கால்களை வெட்டி எடுக்க வேண்டிய தேவை இருந்தது. அப்போது அவர்கள் காலத்தின் கலீஃபாவிடமிருந்து இதற்கான அனுமதி கிடைக்காத வரை நான் அறுவை சிகிச்சை செய்து கொள்ள மாட்டேன் என்று கூறினார்கள். பல நாட்கள் மருத்துவமனையில் இருந்தார்கள். என்னிடம் இருந்து அனுமதி கிடைக்காத வரை அவர்கள் தமது கால்களை வெட்ட விடவில்லை. அனுமதி கிடைத்த பிறகு இப்போது நீங்கள் விரும்பியதை செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

அல்லாஹ்வின் அருளால் பைஅத் செய்த பிறகு, அவர்கள் பெண்ணாக இருந்தும் கூட இவர்கள் தமது கொள்கையில் உறுதியான பாதங்களுடன் நிலைத்து நின்றார்கள். இவரும் இவரது தாயாரும் அஹ்மதிகளாக இருந்தனர். இவர்களது தாயார் வஃபாத் ஆன பிறகு இவர்களது சகோதரர்கள் அவரை அஹ்மதி அல்லாதவர்களின் ஒரு கபருஸ்தானில் அடக்கம் செய்து விட்டனர். அவர்களது தாயார் வஸிய்யதும் செய்திருந் –தார்கள். சகோதரர்களில் எதிர்ப்பு இருந்தும் கூட அந்த அஹ்மதி அல்லாதவர்களின் கபருஸ்தானில் இருந்து அவர்கள் தமது தாயாரின் சடலத்தை வெளியில் எடுத்து அதை ரப்வாவிற்கு கொண்டு வந்து பெஹஸ்தி மக்பராவில் அவர்களை அடக்கம் செய்தார்கள். அல்லாஹ்வின் அருளால் எல்லா விவகாரங்களிலும் நுட்பமான ஞானத்துடன் செயல்படக்கூடியவராக இவர்கள் இருந்தார்கள்.

காதியான் மற்றும் யூ.கே –வில் நடைபெறும் மாநாடுகளில் தொடர்ந்து இவர்கள் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரை பற்றி இவர்களது மகனிடம் உங்களுக்கு தெரியுமா? உங்களது தாயார் அஹ்மதிய்யத்திற்காக உருவிய வாளைப் போன்று செயல்பட்டார்கள் என்று கூறினார்கள். 1985 –களில் Ordinance கொண்டு வரப்பட்ட பிறகு கலிமா அழிக்கப்பட்ட சமயத்தில் கலிமா மீதுள்ள அன்பினை இவர்கள் இவ்வாறு நிரூபித்துக் காட்டினார்கள். ஜமாஅத் சகோதரர்களிடம் உங்களது வீடுகளில் கலிமாவை எழுதுங்கள் என்று கூறப்பட்டபோது இவர்கள் சுயமே ஏணி மீது ஏறி தமது கைகளால் கலிமாவை எழுதினார்கள். இதுபோன்ற விஷயங்களில் மிகவும் கவனமாக நடந்து கொள்கின்ற குடும்பத்தைச் சார்ந்து வேறு ஒன்றிரண்டு பெண்கள் இருக்கத்தான் செய்தனர். ஆனால், இந்த பணியை அவர்களே செய்தார்கள். மரணத் தருவாயில் கூட தமது இறுதி நாளில் அவர்கள் வஃபாத் ஆவதற்கு சிறிது நேரம் முன்னதாக அவர்களுக்கு மூச்சு விடுவதற்கு சிரமமாக இருந்தது என்று இவர்களது மகன் கூறுகின்றார்கள். அப்போதும் கூட மகனின் கையில் கொஞ்சம் ரூபாயை கொடுத்து தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீது சந்தா செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை உடனடியாக செலுத்துமாறு இவர்கள் கூறினார்கள்.

டிஷ் பொருத்துவதற்கான அஹ்மதி குடும்பங்களில் இவர்கள் ஒரு குலுக்கல் திட்டத்தை எவ்வாறு ஆரம்பித்தார்கள் என்றால் இதற்காக லஜ்னா அமைப்பின் கீழ் குலுக்கல் நடத்தி ஒவ்வொரு மாதமும் குலுக்கலில் எவரது பெயர் வருகிறதோ அவரது வீட்டில் டிஷ் பொருத்தினர். இவ்வாறு குத்பா கேட்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களது மருமகனான மிர்ஸா அஹ்ஸன் இம்ரான் ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் பொதுச் செயலராக இருக்கின்றார். அவர்களும் இவர்களைப் பற்றி வீரமிக்கவராகவும், தைரியத்துடன் செயல்படுபவராகவும் அஹ்மதிய்யத்திற்காக எல்லா தியாகங்களையும் செய்ய இவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள் என்றும் எழுதியுள்ளார்கள். திருக்குர்ஆனை முறையாக ஓதி வந்தார்கள். இவர்களுக்கு சரியாக உருது தெரியாமல் இருந்தது. அரசு அதிகாரியின் மகளாக இருந்ததால் ஆங்கிலத்தில் நல்ல புலமை இருந்தது. ஆனால் திருமணத்திற்குப் பிறகு அங்கிருந்த சுற்றுச் சூழலுக்கேற்ப இவர்கள் தங்களை சரிசெய்து கொண்டார்கள். சிந்தி மொழியையும் கற்றார்கள். சிந்தி மொழி பேசுகின்ற அஹ்மதி அல்லாத உறவினர்களுக்கு தப்லீகும் செய்து வந்தார்கள். அல்லாஹ் இவர்களை மன்னித்து இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களது தகுதிகளை உயர்த்துவானாக. இவர்களது சந்ததிகளுக்கும் இவர்கள் செய்து வந்த நன்மைகளை தொடர்ந்து செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு 2017 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இப்போது 126 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 123 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்.**

*✦ **44** நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர் ✦ **20,048** பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர் ✦ ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் **5,300** பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் ✦ தஹஜ்ஜுது தொழுகை ✦ திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல் ✦ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள் ✦ மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு ✦ கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள் ✦ நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✦ ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது ✦ பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ✦ **32** திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது ✦ அச்சகம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ் ✦ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது ✦ **20** முதல் **22** டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான* إِسْمَعُوْا صَوْتَ السَّمَاءِ جَاءَ الْمَسِيْحُ جَاءَ الْمَسِيْحُ *MTA இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டூடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது ✦ **3** முதல் **5** ஜனவரி வரை "The Messiah of the Age" என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி MTA -வில் ஒளிபரப்பப்பட்டது*

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

### நிறைவு அமர்வு

காதியான் ஆண்டு மாநாட்டின் நிறைவு அமர்வின் நிகழ்ச்சிகள் மதிப்பிற்குரிய ஷிராஸ் அஹ்மது சாஹிப் (தென்னிந்தியாவிற்கான கூடுதல் நாஸிர் அ∴லா சத்ர் அஞ்சுமன் அஹ்திய்யா காதியான்) அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய ஹா∴பிஸ் முஹம்மது ∴பாரூக் அ∴ஸம் சாஹிப் அவர்கள் சூரா ஹாமீம் ஸஜ்தாவின் 30 முதல் 31 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை ஜமாஅத்தின் முபல்லிக்கான மதிப்பிற்குரிய ஸய்யிது கலீமுத்தீன் அஹ்மது சாஹிப் அவர்கள் படித்துக் காட்டினார்கள். ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய காலித் வலீது அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவிதை வரிகளைப் பாடினார்கள். அதற்குப் பிறகு மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கோரி சாஹிப் (நாஸிர் அ∴லா சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான் அவர்கள்) ஆட்சியில் இருக்கின்ற முக்கிய பிரமுகர்கள் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் ஜமாஅத் அன்பர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்கள். அவர்கள் மாநாட்டை நடத்துவதற்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கியவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். எல்லாவற்றிற்கும் முதலாவதாக அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்தார்கள். அவனது அருளாலும் கருணையாலும் மாநாடு எல்லா வகையிலும் சிறப்பான முறையில் அதன் நிறைவை எட்டியிருக்கின்றது. இவ்வாறே அவர்கள் ஹுஸூர் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள். அதாவது, ஹுஸூர் அவர்களின் வழிகாட்டலும் பரிவும் எப்போதும் நம்முடன் தொடர்ச்சியாக இருந்து வந்தது. அதற்குப் பிறகு அவர்கள் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்கும் அவற்றின் அதிகாரிகளுக்கும் மாநாட்டிற்காக அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவித்தார்கள். அதற்கு பிறகு அமர்வின் தலைவர் அவர்கள் உள்ளூர் அளவில் நிறைவு துஆ செய்து வைத்தார்கள். இதற்கு பிறகு மேடையிலும் மாநாட்டுத் திடலிலும் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் M.T.A மூலமாக ஒளிபரப்பப்படுகின்ற தங்களது அன்பு இமாம் அவர்கள் காதியான் ஆண்டு மாநாட்டிற்காக நேரலையில் நிகழ்த்த இருக்கின்ற சொற்பொழிவைக் கேட்பதற்காக தத்தமது இடங்களில் அமர்ந்திருந்தனர். ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தியபோது முழு மாநாட்டுத் திடலும் நிரம்பி காணப்பட்டது. இலண்டனிலிருந்து மாநாட்டின் நேரடி ஒளிபரப்புகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக முஸ்லிம் தொலைகாட்சி அஹ்மதிய்யா இன்டர்நேஷனலிலிருந்து காதியான் மற்றும் அதன் புனித இடங்கள் பற்றி விளக்குகின்ற குறும்படம் காட்டப்பட்டது. அதில் தாருல் மஸீஹ், மஸ்ஜிது முபாரக், மஸ்ஜிது அக்ஸா மற்றும் மினாரத்துல் மஸீஹ் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த அழகான காட்சி காட்டப்பட்டது. மேலும், இந்த இடங்களின் முக்கியத்துவம் மற்றும் அருள்கள் தொடர்பாக மிகவும் சிறந்த முறையில் எடுத்துக் கூறப்பட்டதுடன் பெஹஸ்தி மக்பரா மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கல்லறை மற்றும் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமான கிலா∴பத் தோன்றிய இடம் ஆகியவற்றின் மிகவும் அழகான காட்சிகள் காட்டப்பட்டன. அத்துடன் அவற்றைப் பற்றிய அறிமுகமும் சிறந்த முறையில் விளக்கமாகக் கூறப்பட்டது. குறும்படத்தின் இறுதியில் மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளின் சுருக்கமான காட்சிகள் காட்டப்பட்டன. மேலும், காதியானில் ஆண்டு மாநாட்டின் நாட்கள் எவ்வாறிருந்தன என்பதும் அழகிய முறையில் காட்டப்பட்டது.

இதற்கு பிறகு M.T.A -வில் நேரலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. ஹுஸூர் அவர்கள் பைத்துல் ∴புதூஹ் பள்ளிவாயிலில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் வந்து அமர்ந்தார்கள். இலண்டனிலும் ஐந்தாயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்பதற்காக காத்துக் கொண்டிருந்தனர். மதிப்பிற்குரிய அப்துல் மூமின் தாஹிர் சாஹிப் அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 103 முதல் 108 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். பிறகு அதன் மொழியாக்கத்தையும் படித்துக் காட்டினார்கள். அதற்கு பிறகு மதிப்பிற்குரிய ஸய்யிது ஆஸிக் ஹுஸைன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ∴பார்ஸி மொழி கவிதையைப் பாடி அதன் உருது மொழியாக்கத்தையும் எடுத்துக் கூறினார்கள். அதற்கு பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருது கவிதையை மதிப்பிற்குரிய அப்துல் ஹ∴பீஸ் சாஹிப் அவர்கள் அழகிய குரலில் பாடினார்கள்.

அதற்கு பிறகு ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக எழுந்து நின்றதுமே காதியான் மாநாட்டுத் திடலிலிருந்து எழுப்பபட்ட நாரே தக்பீர்; அல்லாஹு அக்பர் என்ற முழக்கங்கள் விண்ணைத் தொட்டன.

தஸஹ்ஹுது தஅவ்வூது மற்றும் சூரா ∴பாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அஹ்மதிய்யத்தின் எதிரிகள் நம் மீது இந்த குற்றச்சாட்டை சுமத்துகின்றனர். இன்றைய நாட்களில் இந்த குற்றச்சாட்டு மிகவும் வலுவாக நம் மீது சுமத்தப்படுகின்றது. அவர்களது எண்ணத்திற்கு ஏற்ப அந்த குற்றச்சாட்டுதான் அஹ்மதிய்யா ஜமாஅத்தை இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியேற்றுகின்றது. (நஊதுபில்லாஹ்) அந்த குற்றச்சாட்டு அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் சிறிதும் தொடர்பில்லாத ஒரு குற்றச்சாட்டாகும். அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத் பெருமானார் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீனாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே அந்தக் குற்றச்சாட்டாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், எவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று ஏற்றுக் கொள்வதில்லையோ அவர் கா∴பிரும் இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியேறி விட்டவரும் ஆவார் என்றே நம்மிடம் கூறியுள்ளார்கள். எனவே, இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது மிகவும் பொய்யான முறையில் சுமத்தப்படுகின்ற கொடூரமான அறிவீனமான ஒரு குற்றச்சாட்டாகும். ஒருபுறம் நாங்கள் எங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டு மறுபுறம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் அவர்களின் கூற்றுக்கு ஏற்ப கத்முன் நுபுவ்வத் தொடர்பான கொள்கையை ஏற்றுக் கொள்ளமல் நாங்கள் எவ்வாறு கா∴பீராக ஆக முடியும்? ஆனால், முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் அச்சுறுத்தப்படுகின்றனர். அதன் காரணமாக அவர்கள் இதுபற்றி சிந்திப்பதற்கும் இதனை

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)**

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 8 March 2018 Issue No. 10

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

பள்ளிவாயிலிருந்து எழுந்து சென்று நாலாப்புறமும் பார்த்தேன். அங்கு எந்த மனிதரையும் நான் பார்க்கவில்லை. அப்போது இது மலக்கின் குரலாகும் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டது. பிறகு நான், அந்த இந்துவையும் அதே சமயத்தில் அழைத்தேன். மலக்கின் குரல் பற்றி அவருக்கு தகவல் தெரிவித்தேன். ஆனால், அவரால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காலையில் சுயமே படாலாவிலுள்ள நீதிமன்றத்திற்குச் சென்றேன். அப்போது தாசில்தாராக ஹாஃபிஸ் ஹிதாயத் அலி என்ற ஒரு நபர் இருந்தார். அவர் அப்போது நீதிமன்றத்திற்கு வந்து சேரவில்லை. அவரது தீர்ப்பின் நகல்களைப் படிக்கின்ற மத்ராதாஸ் என்ற பெயரிலுள்ள ஓர் இந்து அங்கு இருந்தார். நான் அவரிடம், என்ன ? எங்களது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதா ? என்று கேட்டேன். அதற்கு அவர், இல்லை; மாறாக உங்களுக்கு வழக்கில் வெற்றி கிடைத்து விட்டது என்று கூறினார். எதிர் தரப்பினர் காதியானுக்குச் சென்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாக பிரபல்யப்படுத்தி விட்டனரே என்று நான் கூறினேன். அதற்கு அவர் ஒரு வகையில் அவர்களும் கூட உண்மையைத்தான் கூறியுள்ளனர். விஷயம் என்னவென்றால், தாசில்தார் தீர்ப்பை எழுதிக் கொண்டிருந்தபோது அவசியமான ஒரு தேவையின் பொருட்டு அங்கிருந்து நான் எழுந்து சென்று விட்டேன். தாசில்தார் புதியவராக இருந்தார். அவருக்கு வழக்கு தொடர்பான முன்னரும் பின்னரும் நடந்த விஷயங்கள் தெரியாது. எதிர் தரப்பினர் ஒரு தீர்ப்பை அவருக்கு முன்னால் எடுத்து வைத்தனர். அதில் எங்களது மூதாதையர்களால் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு அவர்களது எஜமானரின் அனுமதியில்லாமலேயே தத்தமது வயல்களிலிருந்து மரங்களை வெட்டுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. தாசில்தார் அந்த தீர்ப்பைப் பார்த்து விட்டு வழக்கை தள்ளுபடி செய்து விட்டார். அவர்களை விடுதலை செய்து விட்டார். நான் திரும்பி வந்ததும் தாசில்தார் அந்த தீர்ப்பை என்னிடம் தந்து அதை மற்ற தீர்ப்பின் நகல்களுடன் சேர்த்து வைக்குமாறு கூறினார். நான் அதை படித்துப் பார்த்து விட்டு தாசில்தாரிடம் நீங்கள் பெரும் தவறிழைத்திருக்கின்றீர்கள். ஏனென்றால், எந்த தீர்ப்பின் அடிப்படையில் நீங்கள் இந்த தீர்ப்பை எழுதியுள்ளீர்களோ அந்த தீர்ப்பு மேல் முறையீடு துறையின் சார்பாக ரத்தாகி விட்டது. எனவே, எவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றதோ அவர்கள் தீங்கும் விளைவிக்கும் நோக்கத்துடன் உங்களை ஏமாற்றி விட்டனர் என்று கூறினேன். அப்போதே மற்ற நகல்களுடன் இணைக்கப்பட்டிருந்த மேல் முறையீட்டுத் துறையின் தீர்ப்பையும் அவர்களிடம் காட்டினேன். அப்போது தாசில்தார் அவர்கள் சிறிதும் தாமதிக்கமால் தனது முதல் தீர்ப்பை கிழித்து விட்டார். மேலும், உங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினார் என்று அவர் என்னிடம் கூறினார். இது எத்தகைய ஒரு முன்னறிவிப்பு என்றால் இந்துக்களின் ஒரு பிரிவினரும் பல முஸ்லிம்களும் இதற்கு சாட்சிகளாக இருக்கின்றனர். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்ற இந்த செய்தியை மிகவும் மகிழ்ச்சியுடன் என்னிடம் கொண்டு வந்த அதே ஷரம்பத்தும் இதற்கு சாட்சியாக இருக்கின்றார். فالحمدللہ علی ذالک இறைவனின் பணிகள் வியக்கத்தக்க வல்லமைகளின் மூலமாக வெளிப்படுகின்றன. எங்கள் தரப்பிலிருந்து எவருமே ஆஜராகாமல் இருந்தது மற்றும் எதிர்தரப்பினருக்கு சாதகமாக தாசில்தார் தவறான தீர்ப்பைக் கூறியது ஆகியவற்றின் மூலமாக இந்த முன்னறிவிப்பு பற்றிய முழுமையான நம்பகத் தன்மை உருவாகி விட்டது. உண்மையில், இவை எல்லாவற்றையும் இறைவனே செய்துள்ளான். அவ்வாறு அவன் செய்யாமல் இருந்திருந்தால் முன்னறிவிப்பின் குறிப்பான மகத்துவமும் நம்பகத் தன்மையும் ஒருபோதும் உருவாகி இருக்காது.

**113 -வது அடையாளம்:** شَاتَانِ تُذْبَحَانِ- وَكُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ அதாவது, இரண்டு ஆடுகள் பலியிடப்படும். பூமியில் உள்ள ஒவ்வொன்றும் இறுதியில் மரணித்து விடும் என்று பராஹீனே அஹ்மதிய்யாவில் இடம் பெற்றுள்ள முன்னறிவிப்பாகும். பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டிருந்த இந்த முன்னறிவிப்பு இன்றிலிருந்து 25 வருடங்களுக்கு முன்னரே வெளியிடப் -பட்டிருந்தது. மிக நீண்ட காலம் வரை எனக்கு இதன் பொருள் தெரியாமல் இருந்தது. எனது அனுமானத்தினால் மட்டும் வேறு இடங்கள் இந்த முன்னறிவிப்பிற்குப் பொருந்துகின்றன என்று நான் கூறியிருந்தேன். ஆனால் மர்ஹூம் மவ்லவி சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களும் அவர்களது நற்பேறு பெற்ற மாணவரான ஷேக் அப்துர் ரஹ்மான் அவர்களும் காபூலின் அமீர் எவ்வித உரிமையுமின்றி இழைத்த அநீதியினால் கொலை செய்யப்பட்டபோது ஒளிமிக்க பகலைப் போன்று இந்த இரண்டு பெரியோர்களும்தான் இந்த முன்னறிவிப்பிற்கு பொருந்துபவர்கள் என்பது தெளிவாக எனக்கு தெரிந்து விட்டது. ஏனென்றால், شَاةٌ (ஷாத்துன்) அதாவது, ஆடு என்ற வார்த்தை நபிமார்களின் வேதங்களில் நல்ல மனிதர்களுக்காக மட்டுமே கூறப்பட்டிருக்கின்றது. நமது முழு ஜமாஅத்திலும் இதுவரை இந்த இரண்டு பெரியார்களை தவிர வேறு எவரும் ஷஹீதாகவில்லை. மேலும், எந்த மக்கள் தமது ஜமாஅத்திற்கு வெளியில் இருக்கின்றனரோ மேலும் மார்க்கத்தை விட்டும் நேர்மையை விட்டும் விலகி இருக்கின்றனரோ அவர்களுக்கு شَاةٌ (ஆடு) என்ற சொல் பொருந்தாது. பிறகு, இதைச் சார்ந்திருக்கும் இன்னொரு விஷயம் என்னவென்றால், இந்த இல்ஹாமுடன் சேர்ந்து لَا تَهِنُوْا وَلَا تَحْزَنُوْا என்ற இந்த இன்னொரு சொற்றொடரும் இருந்தது. அதன் மூலம் இவை எத்தகைய மரணங்களாக இருக்கும் என்றால், அது நமது துக்கதிற்கும் துயரத்திற்கும் காரணமாக இருக்கும் என்பது தெரிய வருகின்றது. எதிரியின் மரணத்தால் எந்த துக்கமும் ஏற்படாது என்பது வெளிப்படையான ஒரு விஷயமாகும். சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் ஷஹீது சாஹிப் அவர்கள் காதியானில் இதே இடத்தில் இருந்தபோது அவர்கள் தொடர்பாக قُتِلَ خَيْبَةً وَزِيْدَ هَيْبَةً அதாவது, எதிரிகளிடமிருந்து நம்பிக்கையிழந்த நிலையில் அவர் கொல்லப்படுவார். மேலும், அவர் கொலை செய்யப்படுவது மிகவும் கொடூரமாக இருக்கும் என்ற இந்த இல்ஹாமும் வந்தது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 272)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி....)*

புரிந்து கொள்வதற்கும் இதைப் பற்றி கேட்பதற்கும் ஆயத்தமாக இருப்பதில்லை. எவர்கள் சிந்திக்கின்றனரோ விஷயங்களை கேட்கின்றனரோ அவர்கள், உண்மையில் அஹ்மதி முஸ்லிம்களே உண்மையான முஸ்லிம்களாக இருக்கின்றனர் என்பதை ஏற்று கொள்கின்றனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான வாக்களிக்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவே நமக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அந்தத்தை அடையாளங் கண்டு கொள்ள முடிகின்றது. பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிலுள்ள பெயர் தாங்கி ஆலிம்கள் தங்களது சுய பயன்களைப் பெறுவதற்கும் தங்களது அறியாமையை மறைப்பதற்கும் தங்களால் இயன்ற வரை எப்படியாவது முஸ்லிம்களை அஹ்மதிகளுக்கு அருகில் கூட செல்ல விடக் கூடாது என்பதற்காகவே முயற்சி செய்து வருகின்றனர். இதே வேலையைத்தான் உலகிலுள்ள ஏனைய நாடுகளிலும் இவர்கள் செய்து வருகின்றனர். மேலும் மக்களுக்கு பேராசையூட்டியும் வருகின்றனர். ஆனால், எந்த முஸ்லிம் -களுக்கு முதலில் இஸ்லாம் என்றால் என்னவென்று கூட தெரியாமல் இருந்ததோ அவர்கள் அஹ்மதிய்யத்தின் மூலமாகவே உண்மையான இஸ்லாத்தை கற்றுக் கொண்டனர். அவர்கள்தான் இப்போது அவர்களுக்கு பதில் கூறி வருகின்றனர். அவர்கள் மிகவும் உறுதியாக இருக்கின்ற மக்கள் ஆவர். அவர்கள் இந்த மவ்லவிகளைப் பார்த்து இந்த அளவு நீண்ட காலமாக உங்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வே இல்லாமல் இருந்தது. இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் எங்களுக்கு மார்க்கத்தை கற்றுத் தந்தது. திருக்குர்ஆனை கற்றுத் தந்தது. இப்போதுதான் உங்களுக்கு எங்களை பற்றிய எண்ணம் வந்திருக்கின்றதா? இங்கிருந்து சென்று விடுங்கள். நாங்கள் நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று பதில் கூறிவிட்டனர்.

*(தொடரும்....)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad